விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (05.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

MADRAS CEMENTS LTD
ராம்கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# லண்டன் சென்ற மகிந்தவுக்கு எதிராக புலிக்கொடி ஏந்தி தமிழர் ஆர்ப்பாட்டம்



## பிரித்தானிய பொலிஸாரும் அனுமதி

*(லண்டன்),* பிரித்தானிய மகாராணி எலிசபெத் அம்மையார் மகாராணியாகப் பதவியேற்று அறுபது ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று லண்டன் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தமிழர்கள் புலிக்கொடி ஏந்தியவாறு பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதற்கு பிரித்தானிய பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பிரித்தானிய மகாராணியின் அறுபதாவது ஆண்டு விழா நிகழ்வில் கலந்து கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேற்று லண்டன் சென்றனர்.

இவருடன் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட 35 பிரதிநிதிகள் லண்டன் சென்றனர்.

இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போராட்டங்களை நடத்த பிரித்தானிய (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதமரைச் சந்திக்க மகிந்த எடுத்த முயற்சி தோல்வி

பிரித்தானிய மகாராணியின் அறுபதாவது விழா நிகழ்வில் கலந்து கொள்ள நேற்று லண்டனுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனை தனியாகச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனைச் சந்திக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விருப்பம் கொண்டுள்ளதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் ஊடாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்குத் தகவல் பரிமாறப்பட்ட போதிலும், அது தொடர்பில் எவ்வித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

தாய்லாந்தில் இருந்து நேற்று முன்தினம் கொழும்பு திரும்பிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனுக்குப் புறப்படும்வரை இச் சந்திப்புத் தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சினால் எவ்வித தகவல்களும் அனுப்பப்படவில்லை எனத் தெரியவருகின் றது.

இந் நிலையில், பிரித்தானிய மகாராணியைக் கௌரவித்து பொது நலவாய அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மா அளிக்கவுள்ள விருந்துபசாரத்தின் (19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த ராஜபக்ஷவுடன் ராணிக்கு விருந்து ஏன்?

### கேள்வி எழுப்புகிறார் கென் ரோத்

வடக்கில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொடுமைகளையும் போர்க் குற்றங்களையும் ஒப்புக்கொள்ள மறுக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பிரித்தானிய மகாராணி ஏன் மதிய உணவில் பங்கேற்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கென்ரோத் கேள்வி எழுப்பியுள்ளார் .

தனது டுவிட்டர் இணையதள பக்கத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய பயணத்துக்கு எதிரான போராட்டங்கள் லண்டனில் தீவிரமடைந்துள்ளன.

ஹித்ரோ விமான நிலையத்தில் பெருமளவில் தமிழர்கள் திரண்டு நின்று மகிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதேவேளை நாளை மாலை 7 மணியளவில் லண்டனில் உள்ள மன்சன் ஹவுசில் ஜனாதிபதி மகிந்த உரையாற்றவுள்ளார்.

இதன்போதும் (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்க இனவாதப் போக்கை அரசு கைவிட வேண்டும்

### கலாநிதி குமரகுருபரன் கோரிக்கை



இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கும் உரிமை உள்ளது. அவர்களின் சமய, கலாசார, பண்பாட்டு அம்சங்களை அழிக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படக்கூடாது. இனவாதப் போக்கை கைவிட்டு, நாட்டில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநிறுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மூத்த அமைச்சர்களாகிய பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ராஜித சேனாரத்ன, வாசுதேவ (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு எதிராக சிங்களவரும் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

லண்டன் ஹில்டன் ஹோட்டலுக்கு முன்பாக தமிழ் மக்களுக்கு போட்டியாக சிங்களவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதால், தமிழ் மக்களை அணி அணியாக திரளுமாறு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரித்தானிய மகாராணியின் வைர விழா கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு லண்டன் ஹில்டன் ஹோட்டலில் தங்கி இருக்கும் நிலையில், அந்த ஹோட்டலுக்கு முன்பாக தமிழ் மக்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## சி.ஐ.டி எனக் கூறி நோயாளியிடம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்ற ஒருவர் தன்னை குற்றப்புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவர் என தெரிவித்து நோயாளியிடமிருந்த 4 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், குறித்த நபர் நோயாளியிடமிருந்த பணத்தை திருடிக்கொண்டு தப்பிக்க முயற்சித்தபோது யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக (19ஆம் பக்கம் பார்க்க)

## மர்மப் பொருள் வெடித்ததில் மாணவன் பலி-நயினாதீவில் துயரம்

(யாழ்ப்பாணம்)

மர்மப் பொருள் வெடித்ததில் மாணவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் நயினாதீவு எட்டாம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த நயினாதீவு கணேசா மகாவித்தியாலய மாணவன் தர்மகுலசிங்கம் ரூபன் (வயது-15) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடலுக்குச் சென்ற வேளையில் இந்த மர்மப் பொருள் வெடித்ததில் மாணவன் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

காயத்திற்குள்ளான சிறுவனை நயினாதீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து யாழ். போதான வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளான். இருப்பினும் சிறுவனின் உயிரைக்காப்பாற்ற முடியவில்லை. (ந-4;6)

## வ.மா.க.பணிப்பாளருக்கு ஒரு வருட சேவை நீடிப்பு

(காரைநகர்)

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனுக்கு ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இச் சேவை நீடிப்பு நியமனத்தினை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நேற்று வழங்கியுள்ளார்.

கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனின் பதவிக் காலம் எதிர்வரும் 7ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ள நிலையிலேயே அவருக்கான ஒரு வருட சேவை நீடிப்பு நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-246)

# அதிகாரப் பகிர்விற்கு அரசு இணங்கினால் ஆட்சி கவிழும்-பிக்குகள் முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வுக்கு அரசு இணங்குமானால் அதன் ஆட்சிப் பயணம் அஸ்தமிக்கும் காலம் வெகு தொலைவில் இருக்காது என தேசிய பிக்குகள் முன்னணி எச்சரித்துள்ளது.

நாட்டில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்ற அரசின் கூற்றை நிராகரித்த பிக்குகள் முன்னணி, தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கையுடன் அரசு விளையாடக் கூடாது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கு அரசு தீர்வை வழங்க வேண்டுமே தவிர தமிழ்த் தலைமைகள் தங்களின் அரசியல் நலனைக் கருத்திற் கொண்டு கேட்பவற்றை வழங்கக் கூடாது என்று தேசிய பிக்குகள் முன்னணியின் உப தலைவர் கல்யாண ரன்ஸ்ரீ தேரர் தெரிவித்துள்ளார்.

காலத்தை இழுத்தடிப்பதற்கு அரசு கையாளும் உபாயமே இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவாகும் என பொதுவாகக் கருத்துக்கள் நிலவுகின்றன. இதனை நாம் ஏற்கின்றோம். அரசின் செயற்பாடுகளும் அவ்வாறே உள்ளன.

தமிழ் மக்கள் இன்று அதிகாரங்களைக் கோரவில்லை. பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறே அவர்கள் வேண்டி நிற்கின்றனர். எனவே தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு விரைவில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், வடக்கில் வேலையின்றித் தவிக்கும் பட்டதாரிகளுக்கு அரசு உடன் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். மீள்குடியேற்றம், புனர்வாழ்வு ஆகிய நடவடிக்கைகளைத் திறம்பட செய்து முடிக்க வேண்டும். மாறாக உலகை ஏமாற்றும் நடவடிக்கைகளாக அவை இருக்கக் கூடாது.

சம்பந்தன், பிள்ளையான் போன்றவர்களுக்கு தங்களது அரசியல் நடவடிக்கைகளைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே அதிகாரங்கள் தேவைப்படுகின்றன. இவற்றைத் தமிழ் மக்கள் கோரவில்லை என்பதை மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரப் பரவலாக்கத்திற்கு இணங்கியதால் அன்று ஆட்சி பீடம் ஏறி இரண்டு வருடங்களுக்குள் ஆட்சியை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோன்று இந்த அரசு அதிகாரப் பரவலாக்கத்திற்கு இணங்குமானால் ஆட்சியை விட்டு வெளியேற வேண்டிய நிலை தான் ஏற்படும் என்பது உறுதியான கருத்தாகும். இது தான் யதார்த்தமும் கூட.

நாட்டில் தமிழ் அரசியல் கைதிகள் இருக்கின்றனர், இல்லை என அரசு கூற முயற்சிப்பது தவறான செயலாகும். தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கையுடன் அரசு விளையாடக் கூடாது. அவர்களை விரைவில் விடுதலை செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ந-8,11)

## அச்சுவேலி விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஹன்டர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 11.00 மணியளவில் அச்சுவேலியில் இடம் பெற்றுள்ளது.

இதில் பூதர் மடத்தைச் சேர்ந்தவர்களான மயில்வாகனம் சுதமஸ் (வயது 20) என்பவரும் தேவப் பிரசாத் (வயது 19) என்பவருமே படுகாயமடைந்துள்ளனர்

குறித்த இருவரும் ஹன்டர் வாகனத்தினை முந்திச் செல்ல முற்படுகையிலேயே இவ்விபத்துச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த இருவரும் அச்சுவேலி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அன்புலன்ஸ் மூலம் யாழ். போதான .வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அதி தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

## மதுவால் மோதல் தடுத்தவர் மீது குத்து!

(யாழ்ப்பாணம்)

மது மயக்கத்தில் சண்டை பிடித்தவர்களை தெளிவு படுத்த முயன்ற இருவருக்கு போத்தல் குத்து விழுந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் மூளாய் காளிகோவிலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையாரான சின்னராசா செந்தமிழ்ச் செல்வன் (வயது 38) என்ற குடும்பஸ்தரும் மூளாயினைச் சேர்ந்த இ.துசாகரன் (வயது 21) என்ற இளைஞருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காளி கோவிலடியில் மதுபோதையில் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூன்று பேரினையும் குறித்த இருவர் சமாதான முயற்சியில் ஈடுபடுத்தும் போதே அவர்கள் அருகிலிருந்த போத்திலினை உடைத்து இருவருக்கும் குத்தியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறையிடப் பட்டுள்ளது. (ந-4)

## கடற்றொழிலாளர் சங்க முன்னாள் தலைவர் கைது

(கரவெட்டி)

வடமராட்சி இன்பசிட்டி கடற்தொழிலாளர் சங்க முன்னாள் தலைவர் வேலும்மயிலும் விஸ்வலிங்கம் (வயது 62) கடந்த 28 ஆம் திகதி இரவு 8 மணியளவில் இன்பசிட்டி பகுதியில் வைத்து பயங்கரவாதக் குற்றத் தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று குறித்த நபர் தனது வீட்டிற்கு அருகில் நின்றவேளை வான் ஒன்றில் வந்த பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

பின்னர் அங்கிருந்து கொழும்பு நான்காம் மாடிக்கு விசாரணைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

குறித்த நபர் பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலி சாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி அவர்களால் உறுதிப் படுத்தப்பட்ட பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும், அவர் எக்காரணத்திற்காககைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதுபற்றிய விடரம் இதுவரைகுடும் பத்தினருக்கு தெரியப்படுத்தப்பட் வில்லை. (ந-7,24)

## சட்டவிரோத கருக்கலைப்பு குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத கருக்கலைப்புச் செய்த குடும்பப் பெண்ணொருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

47 வயதான குறித்த குடும்பப் பெண் 9 மாத கர்ப்பிணியாக உள்ள நிலையிலேயே சட்டவிரோதமாக கருக்கலைப்புச் செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் குறித்த தாயினால் பெற்றெடுக்கப்பட்ட குழந்தை எங்கே என்ற கோணத்தில் விசாரணைகளினை மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

## சமாசத் தலைவருக்கு அழைப்பாணை

(கரவெட்டி)

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் வைத்திப்பிள்ளை அருள்தாஸிற்கு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவரும் பருத்தித்துறைமுனை கடற்றொழிலாளர் சங்க தலைவராகவும் பணியாற்றிவரும் இவருக்கு நேற்று முன்தினம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கடிதம் மூலம் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று கொழும்பு 4 ஆம் மாடியில் அவருக்கான விசாரணைகள் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-24)


### கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி

தமிழ்

A/L 2014, A/L 2013

புதிய பிரிவுகள்

ஆரம்பம் 06.06.2012 பி.ப 3.30

உங்களின் ஆசிரியர்

திரு. P.ரதீஸ்

(8568)

### தவறி விட்டது

பொ.வாகீசன் ஆகிய எனது தே.அ.அட்டை (752782237V), JOB I.C, வாகன அனுமதி அட்டை, மோட்டார் சைக்கிள் (Npvm 9774 நடப்பாண்டுவரி, காப்புறுதிப் பத்திரம், வங்கி இலத்திரனியல் அட்டைகள் என்பன 04.06.2012 அன்று தட்டாதெருச் சந்திப்பகுதியில்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0773787294 இலக்கத்துடன் அல்லது அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (8569)

### இலக்கத்தகடு தவறிவிட்டது

தெல்லிப்பழைக்கும் மீசாலை புத்தூர்ச் சந்திக்கும் இடையில் நிலாவரை வழியாகப் பயணம் செய்த மோட்டார் சைக்கிளின் VP5809 என்ற இலக்கமுடையபின் இலக்கத் தகடு கடந்த ஞாயிற்றுக்கிழமை தவறி விழுந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் திருக்கணித பதிப்பகம், டச்சுவீதி, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைத்தோ அல்லது 0773248817 என்ற தொலைபேசி இலக்கத்திற்குத்தகவல் தந்தோ உதவவும். (சி-146)

### செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சிவகார்த்திகேயன். ஆத்மியா மற்றும் பலர் நடிப்பில்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

10.30, 2.30, 6.30, 9.30 D.T.S

### மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்

யாழ் கலாலயா பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்

Yazh Kalalaya Academy Jaffna

கடந்த எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

இதோ

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- முடி சிராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (Hair Dressing & Styling)
- Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகள். ஏழு வகையான சாறி உடுத்தும் முறைகள்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, தைக்கும் பயிற்சிகள்

ஆரம்பம்: 06.06.2012 புதன்கிழமை காலை 9.30 மணி.

### உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

விசேட சலுகைகள்!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).

கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.

வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS



திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி. T.P : 021 222 7835

# இன்று ஒரு தகவல்

## சோதிடம் பலிக்குமா?

"சோதிடம் உண்மையா? பொய்யா?" என ஒருத்தரிடம் கேட்டேன்.

"அதற்கு அவர் எனக்குத் தெரியாது. இது தொடர்பாக எனக்குக் கதை தெரியும்" என்றார்.

"சரி... அதையாவது சொல்லுங்கள் கேட்போம்!" என்று கூறினேன்.

அவர் கதைகூற ஆரம்பித்தார். ஒரு காடு. அங்கே ஒரு குரு. அவரிடம் இரு சீடர்கள் வந்தார்கள்.

"ஐயா... எங்களுக்கு சோதிடம் கற்றுக்கொள்ள ஆசை... அதுதான் உங்களைத் தேடி வந்தோம்" என்றார்கள்.

"சரி... கற்றுத் தருகிறேன்" என்றார். ஆறு மாத காலத்தில் அது தொடர்பான எல்லா பாடத்தையும் நடத்தி முடித்தார்.

பின்பு சீடர்களை அழைத்து, "இங்கே நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியதெல்லாம், பெற்றுவிட்டீர்கள். இனிமேல் வெளி உலகம் தொடர்பாக, தெரிந்து கொள்ள வேண்டியது சிறிதளவு உள்ளது... அதையும் தெரிந்து கொண்டு இங்கே வந்தால், உங்களுக்கு ஆசீர்வாதம் வழங்கி அனுப்பி வைப்பேன்" என்று உறுதிமொழி வழங்கினார்.

சீடர்கள் இருவரும் காட்டை விட்டு வெளியேறி நாட்டைச் சுற்றி வலம் வந்தனர். அப்படி வரும் வழியில் சிற்றூர் வழியே நடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

"தாகமாக இருக்கிறது... சற்று தண்ணீர் குடித்தால் தாகம் தீரும்!" என்று ஒரு சீடன் சொன்னான்.

"அதோ பார்...!" என்றார் மற்றவர். அங்கே ஒரு பெண் மண்குடத்தில் கயிற்றைக் கட்டி கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தாள். மெல்ல அவள் அருகில் சென்று, "அம்மா!" என்றான் அவ்வளவுதான்.

தனக்குப் பின்னால், திடீரென ஒரு சத்தம் வருவதை அறிந்த பெண் "திடுக்" என்று திகைத்து நின்றாள்.

அந்த அதிர்ச்சியில் கிணற்றினுள் கயிற்றை விட்டுவிட்டாள். மண் குடம் கயிறு நழுவியதால், மறுபடியும் கீழே விழுந்து துண்டுதுண்டாக உடைந்து தண்ணீருடன் கலந்து போனது. சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தார்கள்.

"என்ன நடந்தது?" என்று விசாரித்தார்கள். இவர்கள் நடந்தவற்றை தெளிவுபடுத்தினார்கள்.

"சரி வாருங்கள்!" என இரண்டு பேரையும் ஊர்த்தலைவனிடம் அழைத்துச் சென்றார்கள்.

கிணற்றில் தண்ணீர் எடுத்தபெண் ஊர்த் தலைவரின் மருமகள். சீடர்கள் தாங்கள் வந்த விடயத்தைச் சொன்னார்கள்.

"ஓ... உங்களுக்கு சோதிடம் தெரியுமா?" என்றார் ஊர்த்தலைவர்.

"ஆம்... தெரியும்" என்று பதிலளித்தார்கள்.

"அப்படியென்றால், உங்களுக்கு ஜாதகம் பார்க்கும் வேலை ஒன்று உள்ளது"

"யாருடைய ஜாதகம்?"

"என் மருமகளுடைய ஜாதகம்தான். அந்தப் பெண்ணின் கணவனை அதாவது என் மகனை பத்து ஆண்டுகளாக காணவில்லை. அவன் இருக்கிறானா இல்லையா? இது என்னுடைய முதல் கேள்வி. அப்படி உயிருடன் இருந்தால், அவன் எப்போது திரும்பி வருவான்? இது என்னுடைய இரண்டாவது கேள்வி?"

"இந்த இரண்டு கேள்விகளுக்கும் உங்களிடமிருந்து பதில் எதிர் பார்க்கிறேன்!"

"சரி... ஜாதகக் குறிப்பைக் கொடுங்கள்... பார்த்துச் சொல்லுகிறோம்!"

இரு சீடர்களுக்கும் அறை தனித்தனியே கொடுக்கப்பட்டு, கணித்துக் கூறும்படி அங்கு அனுப்பி வைத்தார்.

இருவரும் தனித்தனியே சோதிடக் குறிப்பை ஆராய்ந்தார்கள். அதன் பின் வெளியே வந்தார்கள். "என்ன பார்த்தீர்களா? என்ன முடிவு?" என்றார் ஊர்த்தலைவர்.

முதல் சீடன், "ஐயா! உங்கள் மகன் வருவதற்கான வாய்ப்பு இல்லை. அவரைத் தேடுவதில் அர்த்தமில்லை" என்றான்.

இரண்டாவது சீடன், "ஐயா! அவர் இன்னும் ஒரு வாரத்திற்குள் இங்கே திரும்பி வருவார்" என்றார்.

ஊர்த்தலைவன் யோசித்தான். "அது எப்படி? நீங்கள் இரண்டு பேரும் ஒரே குருவிடம் தான் படித்தீர்கள்... ஆனால், இப்படி இரண்டு விதமாகப் பலன் சொல்கிறீர்கள்...!"

"சரி... எப்படி இருந்தாலும் ஒரு வாரத்தில் உங்களில் யார் சொல்வது உண்மை என்பது தெரிந்துவிடும்... அதுவரை நீங்கள் இருவரும் இங்கேதான் தங்க வேண்டுமென்றும் கூறிவிட்டு சீடர்களை அங்கேயே சிறை வைத்தான்.

ஆறு நாட்கள் ஓடி விட்டன. ஏழாவது நாள் பிறந்தது. ஆச்சிரமத்தில் இருந்த குருவுக்கு சந்தேகம். சீடர்கள் எங்கே போனார்கள்? தேடிக் கொண்டு புறப்பட்டார்.

ஒவ்வொரு இடமாக விசாரித்துக்கொண்டு கடைசியாக சீடர்களின் தலைவரின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். குருவைப் பார்த்த தலைவருக்கு வியப்புக் கலந்த மகிழ்ச்சி.

ஏன் தெரியுமா? காணாமல் போன தன் மகன்தான் அந்தக் குரு... என்பது புரிந்தது.

நடந்த நிகழ்வினை கேட்டுவிட்டு... குரு விளக்கினார். "குடம் உடைந்தது அபசகுணம் என்பதாலும்; உடைந்த பானை ஒன்று சேராது என்பதாலும் கணவன் திரும்பிவர வழியில்லை என்றான் முதல் சீடன்.

இரண்டாவது சீடன் இந்த நிகழ்ச்சியில் பஞ்சபூதங்கள் இணைவதையே கண்டான்.

குடத்தில் இருந்து மண், மண்ணோடு சேர்ந்தது. தண்ணீர் தண்ணீருடன் சேர்ந்தது. ஆகவே கணவன் மீண்டும் வந்து சேர்வார் என்று பலன் எழுதினான்"

"அப்படியென்றால் யார் சொன்னது சரி?"

"இரண்டு பேரும் சொன்னதும் சரிதான்"

"அது எப்படி?"

"இரண்டாவது சீடன் சொன்னபடி, நான் வீட்டுக்கு வந்துவிட்டேன் என்பது உண்மை. அதேசமயத்தில் இப்போது நான் ஒரு சந்நியாசி. குடும்ப உறவில் எனக்கு சம்பந்தமில்லை. ஆகவே, கணவன் என்ற உறவுமுறையில் இங்கே வரவில்லை... இந்த வகையில் முதல் சீடன் சொன்னதும் உண்மை!"

இக்கதையை கூறி முடித்த நண்பரிடம் கேட்டேன்; "சோதிடத்தை நம்பலாமா? வேண்டாமா?" அவர் வேடிக்கையாகச் சொன்னார்.

"ஜாதகப் பலன் உனக்குச் சாதகமாக இருந்தால் அதை நம்பலாம். உனக்குப் பாதகமாக இருந்தால், அதை நம்பாதே! வாழ்க்கையில் எதையும் சாதகமாக எடுத்துக்கொள். அதுதான் நல்லது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கின் வசந்தம் மின்சாரத்திட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்துங்கள்

## மக்கள் வேண்டுகோள்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு அதனூடாக பல பிரதேசங்களுக்கு பரவலாக்கப்பட்டது.

இம்மின்சார பயன்பாடு திட்டமிட்ட ரீதியில் செயற்படுத்தப்படாமையால் பாவனையாளர்களுக்கு உரிய பலன் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வீடுகளில் குறிப்பிட்ட பகுதியினருக்கு மாத்திரமே மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

இம் மின் இணைப்பின் மூலம் அக்கராயன் மருத்துவமனைக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், காந்திக் கிராமம், கோணாவில், யூனியன் குளம், ஸ்கந்தபுரம் போன்ற பல கிராமங்களின் சில பகுதிகளுக்காவது மின்சாரம் கிடைத்திருக்கும்.

இதனால் மின்சார சபைக்கும் வருமானம் கிடைத்திருக்கும் மக்களுக்கும் மின்சார வசதி ஏற்பட்டிருக்கும்.

அவ்வாறு நடைமுறைப்படுத்தாமல் முறிகண்டியிலிருந்து அக்கராயன் வைத்தியசாலைக்கு மக்கள் அதிகளவு செறிந்து வாழாத பிரதேசத்தினூடாக மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கிறனர்.

இவ் வடக்கின் வசந்தம் திட்டமானது ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படுமாயின் கிராமங்களுக்கும் எளிதான முறையில் மின்சாரம் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இத்திட்டத்தினை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-7-254)

# சோலைநகர் கிராமத்தில் உணவு பதனிடும் தொழிற்பயிற்சி

(மல்லாவி)

அவுஸ்திரேலிய சிறுவர் நிதியத்தின் நிதி அனுசரணையுடன் இலங்கை சிறுவர் நிதியம் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சோலைநகர் கிராமத்திற்கு 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் உணவு பதனிடல் தொழிற்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பயிற்சி நெறியானது எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளதாக இத்திட்டத்தின் சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் ஸ்ரீ சரவணபவான் தெரிவித்துள்ளார். இதனால் போரினால் பாதிப் படைந்த விதவைகள், மாற்று வலுவுடைய பெண்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையத்தில் அரிசி மா பொதியிடல், மிளகாய் தூள் பொதியிடல், தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல் உட்பட்ட சிறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சி நெறியினை பின்பற்றுவோருக்கு போக்குவரத்து கட்டணம் அல்லது துவிச்சக்கர வண்டி இலவசமாக வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் விதவைகள், மாற்றுவலுடைய பெண்கள் சிரேஷ்ட திட்ட இணைப்பாளர், இலங்கை சிறுவர் நிதியம், இல.100 ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரியுடனோ அன்றேல் 077 3764794 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 70-90 | 80 | 120 |
| தக்காளி | 130 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 |
| கோவா | 40 | 60 | 80 |
| கரட் | 90 | 120 | 120 |
| பூசணி | 20-25 | 30 | 40 |
| புடோல் | 60 | 40 | 80 |
| வாழைக்காய் | 40 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 60-110 | 100 | 140 |
| பெரிய வெங்காயம் | 85 | 120 | 100 |
| பாகற்காய் | 100 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 100 |
| பயற்றங்காய் | 80-120 | 100 | 90 |
| லீக்ஸ் | 120 | 140 | 160 |
| பீற்றூட் | 60 | 60 | 110 |
| கறிமிளகாய் | -- | 100 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 240 |
| போஞ்சி | 100 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 10 |
| தேசிக்காய் | 130 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 15-20 |

# இராசி பலன்

05.06.2012
(வைகாசி 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
பிரதமை பிற்பகல் 3.08 மணிவரை
கேட்டை முற்பகல் 10.03 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
திருஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை, சித்தாமிர்தம்.

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**இடபம்** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், வெளியூர்ப் பயணங்களால் மனச்சோர்வு ஏற்படும், அம்பிகை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மிதுனம்** இளமைக்கால நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும், கௌரவமான நாள்.

**கடகம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய நபர்களின் சந்திப்புண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**கன்னி** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், வாதத் திறமையால் காரியம் சாதிப்பீர்கள், திடீர் பயணம் தித்திக்க வைக்கும், குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** இஷ்ட தெய்வ வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், தேவையற்ற கற்பனைகள் மனதில் குடிகொள்ளும், புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வெளியூர் பயணமொன்று உருவாகலாம்.

**மகரம்** சுப விரயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**மீனம்** தொழில் சம்பந்தமாக புதிய முடிவெடுப்பீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள்.

வளவன்

# பங்குச் சந்தையும் முதலீட்டாளர்களும்

கொழும்பு பங்குச்சந்தையின் அண்மைக் காலப்போக்கு புதிய முதலீட்டாளர்களுக்கு பங்குச்சந்தை முதலீடுகள் மீதான ஆர்வத்தினை குறைவடையச் செய்திருக்கலாம். ஆனால் பங்குச்சந்தையின் போக்கு எப்போதும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பதில்லை என்று அனுபவமுள்ள முதலீட்டாளர்களின் கருத்து. காலத்திற்குக் காலம் அதன் ஏற்றமும்- இறக்கமும் அவதானிக்க கூடியவை. அதற்கான நியாயமான காரணங்களையும் தேடமுடியும்.

முதலீட்டாளர்கள் பங்குச்சந்தையினை குறுங்காலத்தில் இலாபமீட்டும் ஒரு சுலபமான தளமாகக் நிச்சயமாகக் கருத்க்கூடாது. மாறாக எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப்பெற்றால் அதிலிருந்து நீங்கும் மனநிலையும் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. அதற்கு ஒன்றோ இரண்டோ வருடங்கள் ஆகலாம். சிலவேளைகளில் நீண்டகாலம்கூட எடுக்கலாம். இதற்கு முதலீட்டாளர்கள் தங்களது நிதி இயலுமைக்கு ஏற்ப முதலீட்டினை வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

பங்குச் சந்தையின் முதலீட்டு நுழைவு எம்மைக் கோடீஸ்வரர் ஆக்குவதற்கான ஓர் நுழைவுச்சீட்டு என நாம் கருதினால் எமக்கு பல ஏமாற்றங்கள்தான் மிஞ்சும் என்பது வெளிப்படை. உடனடியாகக் கோடீஸ்வரராகிவிட வேண்டும் என்ற மனநிலையில் இருந்தால் நாம் பல பலவீனமான கம்பனிகளை முதலீட்டுக்காக தெரிவு செய்துவிடலாம்.

முதலீட்டாளர்கள் அறிவுபூர்வமாக நோக்காது பேராசை அல்லது பயத்தினை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டுத் தீர்மானங்களை (கொள்வனவு மற்றும் விற்பனை) எடுத்தால் தீர்மானித்த இலக்கினை அடைந்து கொள்ளமுடியாது.

நடைமுறையினை நோக்கினால், பங்குகளின் தளம்பல்களுக்கு (விலை ஏற்றம் அல்லது விலை இறக்கம்) கம்பனியின் அல்லது துறைகளின் பெறுபேறுகளுக்கு அப்பால் சந்தைக்கோலம் **(Market Sentiment)** மிக முக்கிய இடம்பெறுகின்றது. குறிப்பாகச் சந்தை உச்சத்தில் **(Market up)** இருக்கும்போது நாம் அதனை உணரத் தவறுகிறோம். ஆனால் சந்தையின் போக்கு உச்சத்திலிருந்து கீழ்நோக்கி வருகின்றபோது **(Market Down)** பங்குகளின் விலைகள் குறைந்து விடும் என்ற பயத்தினால் முந்தியடித்து விற்பனை செய்ய எண்ணுகிறோம். இதனால் பங்குச்சந்தையில் பங்குகளுக்கான வழங்கல் மட்டம் **(Supply level)** தொடர்ந்து அதிகரிப்பதனால் பங்குச்சந்தையின் சரிவு தொடர்ந்து காணப்படுகின்றது இதனை **Panic selling** என அழைப்பார்கள்.

உலகில் பங்குச் சந்தைகள் சரிவடைந்து செல்கின்றன என்ற செய்தியை அன்றாடம் ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். ஒரு நாட்டின் பங்குச் சந்தையின் போக்கு அந் நாட்டின் அல்லது பொருளாதாரத்தின் சுபீட்சமான வளர்ச்சியினை குறித்து நிற்கின்றது. நாட்டிற்கு பல வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களைத் தூண்டும் உந்துசக்தியாக பங்குச்சந்தை அமைகின்றது. ஆனால் மந்தமான சூழ்நிலைகளில் பங்குச்சந்தை சரிவடைந்து செல்கின்றது.

உலகின் மந்தமான பொருளாதார வளர்ச்சி வேகம் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் ஏற்பட்ட கடன்நெருக்கடிகள் **(Debt crisis)**, வேலையின்மை மற்றும் மசகு எண்ணெயின் விலைமாற்றங்கள் பொதுவாக ஐரோப்பிய மற்றும் ஆசிய பங்குச் சந்தைகளில் பெருமளவு தாக்கத்தினை ஏற்படுத்தி வருவதனை ஊடகங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**இலங்கை பங்குச்சந்தைப் போக்கு**

கொழும்பு பங்குச்சந்தையின் உத்தியோகபூர்வ குறிகாட்டியான அனைத்துப் பங்கு விலைச்சுட்டியின் **(ASPI)** போக்கு கடந்த ஒரு வருட காலமாக குறைவடைந்து வருவதனை அவதானிக்க முடியும். இதற்கு மேற்குறித்த காரணங்களையும் சுடிக்காட்ட முடியும். இருந்தும் கொழும்பு பங்குச் சந்தையின் தற்போதைய சரிவு ஓர் நிரந்தரமான அல்லது முன்பு ஒருபோதும் ஏற்பட்டிராத ஒன்று அல்ல. பங்குச் சந்தை கடந்த் காலங்களில் பல்வேறுபட்ட ஏற்ற இறக்கங்களை சந்தித்துள்ளதை இந்த அட்டவணை உறுதிப்படுத்துகின்றது.

கொழும்பு பங்குச்சந்தை 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெரியளவு தளம்பல்களை வெளிப்படுத்தியமைக்கு உள்நாட்டு போர் மூலகாரணமாக அமைந்தது எனலாம். பிற்பட்ட காலங்களில் இலங்கை அரசாங்கம் மற்றும் கம்பனிகள் மீது முதலீட்டாளர்கள் கொண்டிருந்த மிகைப் படுத்தப்பட்ட எதிர்பார்ப்பு 2009-2010-ம் ஆண்டு காலப் பகுதிகளில் கொழும்பு பங்குச்சந்தை முறையே 96%, 125% அதிகரிப்பினை வெளிப்படுத்த வழிவகுத்தது. ஆனால் 2011-ம் ஆண்டு காலப் பகுதியில் பங்குச் சந்தை அதிகரித்த செயற்திறன் மட்டத்தினை தக்கவைக்க முடியாது 8% வீழ்ச்சியினை வெளிப்படுத்தியது. இந்த வீழ்ச்சி தற்போது அண்ணளவாக 20% மாக அதிகரித்துள்ளது.

**பங்குச்சந்தை சரிவிற்கான சில காரணங்கள்**

பங்குச்சந்தையின் வளர்ச்சியானது ஒரு படிப்படியானதாக அமையாது சடுதியானதாக அமைந்தமை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் பங்குச் சந்தையின் போக்கு தொடர்

| ஆண்டு | ASPI உயர் | உயர்வு திகதி | ASPI தாழ்வு | தாழ்வு திகதி |
|---|---|---|---|---|
| 2000 | 574.2 | 3 ஜன. 00 | 430.6 | 8 மே 00 |
| 2001 | 678.2 | 10 டிசம். 01 | 383.4 | 17 ஒகஸ்ட் 01 |
| 2002 | 860.3 | 26 செப். 02 | 549.5 | 17 ஜன. 02 |
| 2003 | 1423.5 | 23 ஒக். 03 | 696.7 | 12 மார்ச் 03 |
| 2004 | 1580.7 | 22 டிசம். 04 | 1016.7 | 10 பெப். 04 |
| 2005 | 2551.4 | 16 நவம். 05 | 1509.3 | 03 ஜன. 05 |
| 2006 | 2789.8 | 01 டிசம். 06 | 1817.9 | 18 ஜன. 06 |
| 2007 | 3016.4 | 13 பெப். 07 | 2355.0 | 18 யூலை 07 |
| 2008 | 2681.3 | 23 ஏப்ரல் 08 | 1484.5 | 30 டிசம். 08 |
| 2009 | 3385.6 | 30 டிசம். 09 | 1532.3 | 09 ஜன. 09 |
| 2010 | 7147.8 | 01 ஒக். 10 | 3478.6 | 07 ஜன. 10 |
| 2011 | 7811.8 | 14 பெப். 11 | 5805.8 | 25.நவம். 11 |

பாக ஐயப்பாட்டினை ஏற்படுத்தியது. இது சந்தைத் திருத்தங்களுக்கு **(Market correction)** வழிவகுத்தது. இதனால் பெரும்பாலான முதலீட்டாளர்கள் பங்குகளை தொடர்ச்சியாக விற்பனை செய்து இலாபத்தினை பெறத் தீர்மானித்தனர். குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருமளவு பங்குகளை விற்றுப் பங்குச் சந்தையிலிருந்து வெளியேறினர்.

புதிய பல கம்பனிகள் பங்குச்சந்தையில் பட்டியல்படுத்தி பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கின. ஆனால் அவற்றில் பெரும்பாலான கம்பனிகள் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை (இலாப எதிர்பார்ப்பு) நிறைவேற்றத் தவறின. இது பங்குத் தரகர்கள் மற்றும் முதலீட்டு ஆலோசனை வங்கிகள் மீது **(Placement agencies)** முதலீட்டு ஆர்வலர்களுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியது. மேலும் இலங்கையின் துறை ரீதியான பொருளாதாரங்களும் எதிர்பார்த்த உண்மை வளர்ச்சி வீதத்தினை வெளிப்படுத்தத் தவறிவிட்டன.

வங்கிகளின் வட்டி வீதமானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது. அதாவது 4% இருந்து 15%வரை கடந்த ஒரு வருட காலத்தினுள் மாற்றமடைந்தமை முதலீட்டாளர்களை ஆபத்து நிறைந்த மூலதனச் சந்தை முதலீடுகளிலிருந்து விடுபட்டு பணச் சந்தை முதலீடுகளில் (வங்கி வைப்புக்கள்) முதலிடத் தூண்டியது.

முதலீட்டாளர்கள் தம்மால் தாங்கக் கூடிய கடன் தொகையை விட அளவுக்கதிகமான கடன் தொகையைப் பெற்றுப் பங்குகளில் முதலீடு செய்திருந்தமையும் பங்குச்சந்தை வீழ்ச்சிக்கு ஒரு காரண

## தற்போதைய நெருக்கடியில் முதலீட்டாளர்கள் என்ன செய்ய வேண்டும்?

மாகும். எடுத்துக்காட்டாக ஆயிரம் ரூபாயைச் சந்தையில் முதலீடு செய்து மேலதிகமாக ஐந்நூறு ரூபாயைக் கடனாக பெற்று மேலும் முதலீடு செய்கிறார் என வைத்துக் கொள்வோம். இங்கு அவருடைய மொத்த முதலீட்டுப் பெறுமதி 1500 ரூபாய். இப்போது பங்குகள் விலை அதிகரித்து மொத்த சந்தைப் பெறுமதி மூவாயிரமாகிவிட்டது என எடுத்துக் கொண்டால் இவர் மேலும் ஆயிரம் ரூபாயைப் பங்குச் சந்தையில் இருந்து கடனாகப் பெற்று பங்குகளில் முதலீடு செய்ய வாய்ப்பு உண்டு. இவ்வாறான நிலையில் அவருடைய சொந்த முதல் ஆயிரம் ரூபாயாகவும் கடன் முதல் 1500 ஆகவும் அமைந்துள்ளன.

இந்நிலையில் குறித்த பங்கின் சந்தைப் பெறுமதி தொடர்ச்சியாகச் சரிவினை சந்திக்குமாயின் அவருடைய கடன் சுமையான ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் பெரியதோர் கடன் சுமையாக அமைந்துவிடும். இந்நிலை தொடருமானால் குறித்த முதலீட்டாளர் தனது சொந்த முதலீடான ஆயிரம் ரூபாயை இழக்க நேரிடும். இந்நிலை சந்தையைத் தொடர்ச்சியாக வீழ்ச்சி நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

இலங்கை அரசின் மீது சுமத்தப்பட்டு வரும் தொடர்ச்சியான போர்க்குற்றச்சாட்டுக்கள் இலங்கையின் பொருளாதாரத்தினை பலவீனப்படுத்தி வருகின்றது. இதனால் வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கைகளோ அல்லது வெளிநாட்டு கம்பனி முதலீடுகளோ உள்வருவது குறைவடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

தற்போது இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக அபிவிருத்தி உதவி உடன்படிக்கைகள் பெரும்பாலும் மத்திய அரபு நாடுகளுடனேயே தொடர்புபட்டிருக்கிறது. ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளில் இருந்து மிகவும் குறைவான முதலீட்டு வாய்ப்புக்கள் அமைந்திருத்தல் ஆரோக்கியமானதல்ல என பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஜி.எஸ்.பி.வரிச் சலுகை நீக்கம், உலக சந்தையில் மசகு எண்ணெயின் அதிகரித்த போக்கு மற்றும் இலங்கை ரூபாயின் பெறுமதி குறைவடைந்து செல்லுதல், நாட்டின் இறக்குமதிச் செலவினத்தினை அதிகரித்து வர்த்தக நிலுவையில் பாரிய பற்றாக்குறையினை ஏற்படுத்தி உள்ளமை போன்றனவும் பங்குச் சந்தையின் வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளன.

இலங்கை அரசினால் அண்மைக் காலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட குறை பாவனையுடைய சொத்துக்களை சுவீகரித்தல் சட்டமானது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பாரிய ஏமாற்றத்தினை முதலீடுகள் மீதான நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியது.

அந்நிய செலாவணிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி இலங்கை ரூபாயின் பெறுமதியினை மிதக்கவிட்டமை, ரூபாயின் பெறுமதி தேய்வடைய [illegible] உட்பட்டமை வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய கம்பனிகளுக்கு ஒரு குறுங் காலப் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களைப்

பொறுத்தமட்டில் இது கவர்ச்சியான விடயமாக இருந்தாலும் இங்கு ஏற்படக் கூடிய பாரிய தளம்பல்கள் விரும்பத்தக்கவையல்ல.

இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் காலத்துக்கு காலம் நடைமுறைப்படுத்திய பங்குச் சந்தை தொடர்பான ஒழுங்கு மற்றும் ஒழுக்க விதிகள் முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டவை.

ஆனால் இதனை மூலதனச் சந்தையுடன் தொடர்புபட்ட சிலர் சாதகமாக நீண்டகால நோக்கத்தில் அணுகாது குறுகிய நோக்கில் பல முதலீட்டாளர்களை தொழில் தர்மத்திற்கு மாறாக வழிப்படுத்தி விட்டனர்.

மேற்குறித்த அனைத்துக் காரணிகளும் எப்போதும் நிரந்தரமானவை அல்ல. காலத்திற்கேற்ப நிலைமை மாறுபடலாம். எனவே முதலீட்டாளர்கள் தமது முதலீடுகள் தொடர்பாக அவதானமாகச் செயற்பட்டு பொருத்தமான முடிவுகளை உரிய நேரத்தில் எடுத்து முதலீட்டினைப் பாதுகாத்தல் அவசியமானதாகும்.

**பங்கு முதலீட்டாளர்கள் செய்ய வேண்டியவை**

பங்குச் சந்தை முதலீடுகள் ஆபத்துடன் தொடர்புபட்டது என்பதனை மனதில் கொண்டு தீர்மானங்களை எடுங்கள். அது உங்களால் ஏற்கக் கூடிய மற்றும் தாங்கக்கூடிய ஆபத்து மட்டத்திற்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

பங்குத் தரகருடன் தொடர்பு கொண்டு மேற்குறித்த காரணங்களுக்கான மேலதிக முழுமையான விளக்கங்களை அறிந்து கொள்வதுடன், நீங்கள் கொண்டுள்ள பங்குகளின் பலம் மற்றும் பலவீனங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் பங்கு முதலீடுகளை அடிக்கடி மீளாய்வு செய்து கொள்ளுங்கள்.

இதற்குப் பின்வரும் வழிகளைப் பின்பற்றலாம்.

பங்கின் கொள்வனவு விலை என்ன? தற்போதைய விலை என்ன? கம்பனியால் வழங்கிய பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவு? விலை அசைவு மற்றும் போக்கு எப்படி உள்ளது? கடந்த ஒரு வருட காலத்தில் வழங்கப்பட்ட கூடிய மற்றும் குறைந்த விலை என்ன? உரிமம் மாற்றம் மற்றும் சந்திப்புப் பலகை **(Crossing details)** விலை மற்றும் பங்குகளின் எண்ணிக்கை யாது? என அறிந்து கொள்ளுங்கள்.

மேற்கண்ட விடயங்களை மனதிற் கொண்டு உங்கள் பங்கின் தற்போதைய சந்தை விலையானது பங்குக்கான தேறிய சொத்தினைக் **(NAV)** காட்டிலும் குறைவாக அல்லது மிக அண்மித்ததாக காணப்பட்டால் அத்துடன் ஏற்கக்கூடிய உழைப்பு வீதத்தினைக் **(EPS)** கொண்டிருந்தால் நீங்கள் அந்தப் பங்கைக் நம்பிக் கொள்வனவு செய்யலாம்:

பங்கு ஒன்றைக் கூடிய விலைக்கு கொள்வனவு செய்திருந்தால் இன்று தொடக்கம் பங்குச் சந்தையினை அவதானித்துப் பங்குக்கான சராசரிக் கிரயத்தினைக் குறைக்கும் **(Average)** முயற்சியில் நீங்கள் ஈடுபட வேண்டும்.

சரிவடைந்து செல்லும் சந்தையில் புதிய முதலீட்டினைத் தொடுக்க அல்லது மேலதிக பங்குகளைக் கொள்வனவு செய்து பங்கின் கிரயத்தினைக் குறைக்க 'கிரமமான முதலீட்டுத் திட்டத்தினைக்' **(Systematic Investment Plan)** கையாளுதல் சாலச் சிறந்தது. அதாவது பணத்தினை ஒரே தடவையில் பங்குகளில் முதலீடு செய்யாது படிப்படியாக அந்த வாரம் அல்லது மாதத்தின் மிகக் குறைந்த விலையில் தொடர்ச்சியாக குறித்த காலத்திற்கு முதலீடு செய்தல் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த முதலீட்டு முறைகளில் ஒன்றாகும்.

நீங்கள் கொண்டுள்ள பங்குகள் பலவீனமானது என உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் மீளவும் அதையே கொள்வனவு செய்யாது வேறு துறையில் பலமான பங்குகளைத் தெரிவு செய்து முதலீடு செய்யுங்கள்.

நீங்கள் முதலீடு செய்துள்ள கம்பனியின் காலாண்டு மற்றும் நிதியாண்டு அறிக்கைகளைப் பார்வையிடத் தவறாதீர்கள். அதாவது அடிப்படையில் பலமான கம்பனிகளின் பங்குகளும் சந்தையின் ஒட்டுமொத்த சரிவின்போது ஆட்டம் கண்டு விடலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நட்டத்திலாவது பலவீனமான கம்பனிகளை விற்றுப் பலமான கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்வது சிறந்ததாக அமையலாம். உங்கள் பங்குகள் பலமானவை என உறுதிப்படுத்தப்பட்டால் அமைதியாக இருங்கள்.

நீங்கள் பங்குச் சந்தை முதலீடுகள் தொடர்பாக பங்குத் தரகர் நிறுவனங்கள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றிருந்தால் அவற்றினை உரியவாறு உறுதிப்படுத்திக் கொள்ளத் தவறாதீர்கள்.

குறிப்பாக நீங்கள் பெற்ற கடன், பங்கு முதலாக அமைந்துவிட்டால் பங்குகளுக்கான பாதுகாப்பு, வட்டி வீதம், தவணைக்காலம் போன்றவற்றுக்கான உத்தரவாதம் மிகவும் அவசியமானது.

உங்கள் பங்குத் தரகர் அல்லது பங்குத் தரகர் நிறுவனங்கள் உங்களுக்கு உரிய சேவைகளை வழங்கத் தவறியுள்ளனர் அல்லது தவறுகின்றன என நீங்கள் உணர்ந்தால். அவற்றிலிருந்து உரிய காலத்தில் நீங்கி ஆபத்தற்ற முதலீட்டு மூலங்களை நாடுதல் வேண்டும்.

பொதுவாக அவதானிக்கக் கூடிய ஆனால் அருவருக்கத்தக்க விடயம் என்னவெனில் சில முதலீட்டு ஆலோசனை வங்கிகள், தரகர் நிறுவனங்கள் மற்றும் பங்குத் தரகர்கள் வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்வதை நோக்காக் கொள்ளாது குறுக்கு வழிகளில் தொழில் தர்மத்திற்கு மாறாக செயற்படுகின்றனர் எனச் சில முதலீட்டாளர்கள் கருதுகின்றனர்.

எனவே பங்குத் தரகர்கள் பத்திரிகைகளில் வருகின்ற பக்கச்சார்பான, எந்தவித ஆதாரமுமற்ற ஆய்வு அறிக்கைகளை நம்பி உங்கள் சமுதாயத்தின் கடின உழைப்பினைக் கண்ட கண்ட பங்குகளில் முதலீடு செய்யாது ஒவ்வொருவரும் தனிப்பட்ட அல்லது இணைந்த ஆய்வுகளுக்கு தங்களை அர்ப்பணித்து முதலீட்டுத் துறையினை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

தனிப்பட்ட அனுமதிப் பத்திரம் பெற்ற **(RIA)** பங்குத் தரகர்களை முதலீட்டு ஆலோசகராகக் கொண்டிருத்தல் உங்கள் முதலீட்டு மேலதிக பாதுகாப்பு என்பதனை மனதில் கொள்ளுங்கள்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5009.67 | 4885.18 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4526.13 | 4343.48 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 2,265.49

*உயர்வடைந்த பங்குகள்:* ஒபிஸ் ஈகுப்மன்ட்(914.10),ஈகுவிட்டி ரூ பிஎல்சி(18.00). றேயல் பாம்(48.00),டோர்ஸன்ஸ்(70.00),ஹோட்டல் சேவிஸ்(14.90).

*சரிவடைந்த பங்குகள்:* கூஜே(45.60), சிரஸ் லிசர்(w)(0.20), சிலோன் பெவரேஜ்(258.50), சிரஸ் லிசர்(w)(3.00), ரீ சிமோல் ஹோல்டர்(33.70).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூ |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.05 | 133.65 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 199.61 | 205.84 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.93 | 165.63 |
| சுவிஸ் பிராங் | 132.91 | 138.24 |
| கனேடிய டொலர் | 125.02 | 129.77 |
| அவுஸ்திரேலிய டொலர் | 125.19 | 130.31 |
| சிங்கப்பூர் டொலர் | 100.57 | 104.28 |
| ஜப்பான் யென் | 1.64 | 1.71 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.35 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.96 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# வவுனியா மத்தியஸ்தசபை வழக்குகள் பலவற்றுக்கு தீர்வு

(பூந்தோட்டம்)

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட மத்தியஸ்த சபைக்கு மாதாந்தம் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதாகவும் அவற்றில் பலவற்றுக்கு விரைவில் தீர்வுகளை கண்டு வருவதாகவும் மத்தியஸ்த சபையின் தலைவர் எஸ்.வரதராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

தற்போது பொலிஸாரும் வழக்குகளை மத்தியஸ்தசபைக்கு கொண்டு வருவதாகவும் அதிகளவில் சட்டவிரோத பணப்பரிமாற்றத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளும் காணிப் பிரச்சினைகளுமே மேலோங்கிக் காணப்படுவதாகவும் தெரிவித்த அவர் அவ்வாறான விடயங்களுக்கு இரு தரப்பும் சம்மதம் தெரிவிக்கும் வகையில் தீர்வுகள் காணப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மத்தியஸ்தசபை தெரிவு செய்யப்பட்டு 3 மாதகாலப்பகுதிக்குள் 50 இற்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான வழக்குகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் சபை கூடி ஒரு வழக்கிற்கு மத்தியஸ்தசபையின் அங்கத்தவர்கள் மூவர் கொண்ட குழு மூலமாக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். (அ-9-266)


## இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



பதினொராம் திருவிழா (05.06.2012)

இணுவையின் நாயகனே எழில் ஞான வடிவேலா!



இணுவையின் நாயகனே
எழில் ஞான வடிவேலா!
பக்திக்கு வித்தான
எழில் ஞான வடிவேலா!
பழனியிலே குடிகொண்ட
எழில் ஞான வடிவேலா!
வறுமை பிணி போக்கிடுவாய்
எழில் ஞான வடிவேலா!
வரம் தந்து வாழவைப்பாய்
எழில் ஞான வடிவேலா!



குறிஞ்சிக்கவி-செ.ரவிசாந்
வீரமனை, குப்பிளான்.

11 ஆம் திருவிழா உபயகாரர்

(சி-081)


# கொள்ளைக் கும்பல் சார்ஜாவில் கைது

(கொழும்பு)

சார்ஜாவில் உள்ள வீடுகளில் கொள்ளையிடப்பட்டதாக கூறப்படும் இரண்டு இலங்கைப் பெண்கள் உட்பட குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இவர்கள் கொள்ளையிடப்பட்டதாக கூறப்பட்ட 2 இலட்சத்து 20 ஆயிரம் தினார் பெறு மதியான நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுடன் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் குழு நகை ஒன்றை சார்ஜாவில் 48 ஆயிரம் தினாருக்கு விற்பனை செய்துள்ளது. அத்துடன் பெறுமதியான பல நகைகளை உத்தியோக பூர்வமாக இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக சார்ஜா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தக் குழுவிடம் இருந்து போலியான கடவுச்சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-2)

# டெசோ மாநாடு விரைவில் கூடும் தமிழீழம் விரைவில் உருவாகும்

## கலைஞரின் பிறந்தநாள் செய்தி



(சென்னை)

இலங்கையில் விரைவில் தனி ஈழம் உருவாக வேண்டும் என்பதுதான் எனது பிறந்த நாள் செய்தி என கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கலைஞர் கருணாநிதியின் 89 ஆவது பிறந்த நாள் விழா தென் சென்னை மாவட்டம் சார்பில் கே.கே.நகரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

கூட்டத்தில் தி.மு.க.தலைவர் கருணாநிதி கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தி.மு.கவை பொறுத்தமட்டில் துணிச்சலுடனும் விவேகத்துடனும் விவாதித்து யாராக இருந்தாலும் மக்களை பாதிக்கும் காரியங்களை செய்தால் தட்டிக் கேட்போம். நமது போராட்டம் என்பது வெற்றி பெற்று ஆட்சியில் அமரவேண்டும் என்பது அல்ல. மக்களுக்காக பாடுபடவேண்டும் என்பதுதான். பாடுபட்டு வளர்த்த தி.மு.க. இயக்கத்தை அடியோடு நாசம் செய்ய ஒரு கூட்டம் தயாராகியுள்ளது. இந்தப் போராட்டம் தேர்தலுக்காக நடக்கும் போராட்டம் அல்ல.

நமது சுயமரியாதையை காப்பாற்றுவதற்காக நடக்கும் போராட்டம் ஆகும். இலங்கையில் சிங்களர் இனம் வேறு, தமிழர் இனம் வேறு என்று நிலையுள்ளது. தமிழர்களுக்கு சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதற்காக டெசோ மாநாட்டை மீண்டும் தமிழகத்தில் நடத்தவேண்டும் என்று முடிபெடுத்திருக்கிறோம். இதை நான் பிறந்த நாள் செய்தியாகச் சொல்கிறேன்.

விரைவில் விழுப்புரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளோடு சேர்ந்து டெசோ மாநாடு நடத்தப்படவுள்ளது. விரைவில் இலங்கையில் தனி ஈழம் உருவாக வேண்டும் என்பதுதான் எனது பிறந்தநாள் செய்தியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# முற்றோதல்

(பூந்தோட்டம்)

வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெறும் திருமுறை முற்றோதல் நிகழ்வு இம்முறை 17 ஆவது தடவையாக இடம்பெறவுள்ளது.

திருஞானசம்பந்தர் குருபூசை தின மான இன்று செவ்வாய்க்கிழமை இறை பணிச் செம்மல் செ.வை.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. (அ-9-266)

# அரசுக்கு எதிராக தேசிய எதிர்ப்பு தினத்தை அறிவிக்க எதிர்க்கட்சிகளின் கூட்டணி நடவடிக்கை

(கொழும்பு)

ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரத்தையும் பறித்து அரசாங்கம் மக்களை கொல்லாமல் கொலை செய்து வருவதாகவும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக தேசிய எதிர்ப்பு தினத்தை அறிவிக்க எதிர்க்கட்சிகளின் கூட்டணி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய வேலை நிறுத்த போராட்டத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த தேசிய எதிர்ப்பு தினமானது அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைக்க எடுக்கப்படும் முதல் கட்ட நடவடிக்கை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஊழல் மோசடிகள் நிறைந்த அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றி மக்களுக்கு சார்பான அரசாங்கத்தை உருவாக்குவதற்கு எதிர்க்கட்சிகளின் கூட்டணியுடன் கைகோர்க்குமாறும் ஜயசூரிய மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (அ-2)

# 150 இலங்கை அகதிகள் கேரளாவில் தடுத்துவைப்பு


தமிழ்நாட்டின் கொல்லம் கடற்கரையில் (கேரளா) படகொன்றில் சுமார் 150 இலங்கை அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 19 பெண்களும் 22 சிறுவர்களும் அடங்குவதாகவும் இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதியளித்த முகவரொருவருக்கு இவர்கள் ஒரு இலட்சம் முதல் 5 இலட்சம் வரை பணம் செலுத்தியுள்ளதாகவும் ஆனால் இவர்கள் இந்தியாவில் கைவிடப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

படகோட்டி மற்றும் உதவியாளர் ஒருவருடன் குறித்த முகவர் தலைமறைவாகியுள்ளார். அனைத்து அகதிகளும் தமிழ் நாட்டிலுள்ள நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளனர். இவர்களில் சிலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

எலிசபெத் அரசியார் முடி சூடி 60 ஆவது ஆண்டுகள் பூர்த்தி விழாவில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவையும் நேற்றைய தினம் லண்டன் கீத்ரு விமான நிலையத்தில் வரவேற்க்கப்படுவதை படத்தில் காணலாம்.





வலிகாமம் கல்வி வலயத்தின் தமிழ்த்தினப்போட்டி அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மங்கல வாத்தியங்கள் முழங்க வலயக்கல்விப் பணிப்பாளர் அ. ராஜேந்திரன், பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி. கந்தசாமி, கலாநிதி ஆறு திருமுருகன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ராஜவரோதயம் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம்.

## ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோவில் வீதி ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறவுள்ளது.

உற்சவ காலத்தில் தினமும் காலை 10.30 மணியளவில் பூஜை அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகும். மீண்டும் மாலை 6.30 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகி நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபைச் செயலாளர் சி. ஜெகஞானம் அறிவித்துள்ளார். (அ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய் மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8.15 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று மூற்பகல் 10 மணிக்கு தேர்ப்பவனியும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (அ-9)

# பஞ்சாயத்து முறைமையை சமூகத்தில் ஏற்படுத்தி பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்

## நீதிவான் நீதிமன்ற நீதிவான் மா. கணேசராஜா

(யாழ்ப்பாணம்)

**சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளை கட்டுப்படுத்த அனைத்து சமூகத்தினரும் முன்வர வேண்டும் என யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்களின் பிரதி நிதிகளால் உருவாக்கப்பட்ட சிவில் பாதுகாப்புக்குழு அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் எவ்வாறு வெளியேற்றப்பட்டார்களோ அதே போன்றதொரு சம்பவம் தமிழனாக இருந்த போதும் எனக்கும் நடந்தது.

இதனை முன்பு வெளிப்படையாக பேச முடியாத நிலையிருந்தது. ஆனால் தற்போது சமாதானம் ஏற்பட்டுள்ளது. ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ள சூழலில் இவற்றைப் பேச முடியும்.

ஆயுதக் குழுக்களினால் சமூக விரோதச் செயற்பாடுகளும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளும் கட்டுப்பாடின்றி நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் என்னால் இங்கு வாழ முடியாத நிலையில் நான் வெளியேற்றப்பட்டேன்.

குற்றச் செயல்களில் எந்தச் சமூகத்தை சார்ந்தவர்கள் ஈடுபட்டாலும் சட்டம் தண்டிக்கும்.

இருப்பினும் ஒரு இனத்தை அல்லது ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் ஒரு சிலர் செய்யும் தவறுக்காக அந்த இனத்தவர்கள் அனைவரையும் குற்றம்சாட்ட முடியாது .

காரைநகரில் மனநலம் குன்றிய யுவதி மீது வன்புணர்வில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம்சாட்டி முஸ்லிம் இனத்தவர்கள் இருவரைக் கைது செய்தபோது சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக இந்த முஸ்லிம் சமூகத்தினர் கண்டன அறிக்கையை விடுத்திருந்தனர்.

மேலும் முஸ்லிம் மக்கள் தொடர்பாக எனது நீதிமன்றில் வழக்குகள் வருவது மிகவும் குறைவு.

இருப்பினும் பஞ்சாயத்து முறையை உங்கள் சமூகத்தில் நடைமுறைக்கு கொண்டு வாருங்கள். மதத் தலைவர்கள் ஊடாக தீர்க்கப்பட முடியாது போனால் மட்டும் நீதிமன்றிற்கு அந்தப் பிரச்சினைகளைக் கொண்டு வாருங்கள்.

சிவில் பாதுகாப்பு குழு உருவாக்க முஸ்லிம் சமூகத்தினர் முன்வந்ததை நான் வரவேற்கின்றேன்.

ஏனைய சமூகத்தினரும் முன்வந்து சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.'

எனவே முஸ்லிம் மக்கள் தொடர்பான பிணக்குகளை பள்ளிவாசல்களுடன் முடித்துக் கொள்ளுங்கள். அவற்றை நீதிமன்றத்திற்கு வராவிடாதீர்கள் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ-6)




## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## அரச தேசிய நாட்டிய நாடகவிழா

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டுக்கான அரச தேசிய நாட்டிய நாடக விழா, ஆற்றுகையாளர் கௌரவிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் மண்டபத்தில் திருமதி கே. பகீரதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன், கௌரவ விருந்தினராக செல்வி அ. கந்தையா, சிறப்பு விருந்தினர்களாக ஏ. சதானந்தன், நடன வாரிதி திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், ஸ்ரீமதி வசந்தி குஞ்சிதபாதம், ப. தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என நர்த்தன சேத்திரா இயக்குநர் அறிவித்துள்ளார். (அ-9)

# எங்களையும் மீள்குடியமர்த்துங்கள் பலாலி மக்களின் கண்ணீர்

(கரவெட்டி)

பலாலி,மயிலிட்டி பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து 23 வருடங்களாக வடமராட்சி கரையோர பிரதேசங்களில் மண் குடிசைகளில் வாழ்ந்து வரும் மக்கள் தமது சொந்த இடங்களில் தம்மை இதுவரை மீள் குடியேற்றவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் இடப்பெயர்வுகள் தொடர்கதையாகவே கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன.

இவ்விடப்பெயர்வுகளின் போது பலாலி, மயிலிட்டி பகுதிகளைச் சேர்ந்த இம்மக்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இதில் ஒரு பகுதி மக்கள் வடமராட்சி பிரதேசத்திலுள்ள பொலிகண்டி, சக்கோட்டை பகுதிகளில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் இன்றுவரை வசித்து வருகின்றனர்.

மேலும் பொலிகண்டி மேற்கு குடியேற்ற திட்டத்திலும் அப்பகுதிகளிலும் 51 குடும்பங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் அடிப்படை வசதிகளின்றி பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்திவருகின்றனர்.

இவர்களது சீவனோபாயம் கூட மிகுந்த சிரமத்துடனே காணப்படுகின்றது. மக்கள் தமது சொந்த இடங்களில் மீண்டும் மீள் குடியேறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-7-24)



## சம்பந்தர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இந்து மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் இந்து மாணவர் மன்றத் தலைவர் சு. அஜிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களின் பேச்சு, கவிதை, வினாடிவினா போன்ற போட்டிகளும் ஆசிரியர் கு. விக்னேஸ்வரனின் நற்சிந்தனையும் நடைபெறவுள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ். சத்தியவரதன் அறிவித்துள்ளார். (அ-9)

# வாக்குறுதிகளை மஹிந்த நிறைவேற்றாத வரை இலங்கை செல்வதில்லை-மன்மோகன்சிங் முடிபு

(புதுடில்லி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாதவரை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொழும்பு வரத் தயாராக இல்லை என்று புதுடில்லியில் உயர்மட்ட அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட் டுள்ளன.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் உடனடித்திட்டங்கள் எதுவும் இல்லை என இந்திய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 இல் விடுதலைப் புலிகளுக்கெதிரான போர் முடிவுக்கு வந்த பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கடந்த 2008 ஆம் ஆண்டில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதுவும் இரு தரப்புப் பயணமாக அமையவில்லை. சார்க் மாநாட்டுக்காகவே அவர் இலங்கை சென்றார்.

கடந்த 2010 ஜுன் மாதம் புதுடில்லிக்கு இருதரப்புப் பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமரை கொழும்புக்கு வருமாறு அழைத்திருந்தார்.


இந்த அழைப்பு விடுத்து இரண்டு ஆண்டுகளாகியும் மன்மோகன்சிங் அதை ஏற்று கொழும்புக்கு செல்லவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி மஹிந்த வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதபோது இந்தியப் பிரதமர் எவ்வாறு இலங்கைக்கு பயணம் மேற்கொள்வார் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரப் பகிர்வை வழங்குவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவிடமும் சுஷ்மா சுவராஜிடமும் தெரிவித்திருந்தார். இவையெல்லாம் வெறும் கடதாசியிலே உள்ளன.

சீபா எனப்படும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டில் கையெழுத்திடவும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவை இந்தியாவை ஏமாற்றமடைய வைத்துள்ளது.

இந்த உடன்பாடு தயாராகி இரண்டு ஆண்டுகளாகியும் தூசிபடிந்த நிலையிலுள்ளது. இந்தியாவுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றியிருந்தால் கடந்த மாதம் கொண்டாடப்பட்ட புத்தரின் 2555 ஆவது பரிநிர்வாண நாளில் மன்மோகன்சிங் கொழும்பு சென்றிருப்பார் என அவ் அதிகாரி



மேலும் தெரிவித்துள்ளார்.

1957 ஆம் ஆண்டு மே மாதம் புத்த ஜெயந்தியில் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# போர்க்குற்றங்களை ஒப்புக்கொள்ளாத இலங்கை அரசுடன் விருந்துண்ணலாமா?

## மகாராணியிடம் கென்ரோத் கேள்வி

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற கொடுமைகளையும் போர்க்குற்றங்களையும் ஒப்புக்கொள்ள மறுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் பிரித்தானிய மகாராணி ஏன் மதிய உணவில் பங்கேற்ற வேண்டும்? என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கென்ரோத் கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்திலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். இந்நிலையில் ஜனாதிபதியின் பிரித்தானியப் பயணத்துக்கு எதிரான போராட்டங்கள் லண்டனில் தீவிரமடைந்துள்ளன.

ஹீத்ரோ விமான நிலையத்தில் நேற்று முன்தினமிரவு பெருமளவில் தமிழர்கள் திரண்டு நின்று மகிந்த ராஜபக்சவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதேவேளை நாளை புதன்கிழமை மாலை 7 மணியளவில் லண்டனில் உள்ள மன்சன் ஹவுசில் உரையாற்றவுள்ளார். இதன்போது மகிந்த ராஜபக்சவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை நடத்துவதற்கும் புலம்பெயர் தமிழர்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# சீருடைக்கான துணிகளை உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கான பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான துணிகள் உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்களின் சீருடைத் தேவைகளில் 50 சதவீதமானவை உள்ளூரிலே உற்பத்தி செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தேசிய ரீதியாக பெறப்படும் துணிகளில் 30 சதவீதமானவை களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் தேவையான சீருடைகளை களஞ்சியப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அடுத்த வருடத்திற்கான சீருடைகள் டிசெம்பர் விடுமுறைக்கு முன்னர் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# போலி மருத்துவ பட்டங்கள் தொடர்பில் சட்டத்திருத்தம்

(கொழும்பு)

இலங்கையில் போலி மருத்துவர்களின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால் போலி மருத்துவர்களுக்கான பட்டங்களை பெற்றுக் கொடுப்போருக்கு தண்டனையை அதிகரிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாய்க்கவின் தகவல்படி இவ்வாறானவர்களுக்கு இதுவரை விதிக்கப்பட்ட 205 ரூபா அபராதம் இனிமேல் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் போலி மருத்துவர்களுக்கான பட்டங்களை வழங்கி வருவதாக தகவல் கிடைத்துள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை தவிர வேறு நிறுவனங்களினால் மருத்துவ பட்டங்கள் வழங்கப்படமுடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வெளிநாடுகளுக்கு சென்று மருத்துவப்பட்டம் பெறுவோர் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகவும் சமரநாயக்க குறிப்பிட்டார். (அ-2)




★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பியெட்மொண்ட் நகரில் இடம்பெற்ற போரில் அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளைத் தோற்கடித்து கிட்டத்தட்ட ஆயிரம் பேரை சிறை பிடித்தனர்.

★ 1900-இரண்டாம் போவர் போர்: பிரித்தானியர் தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியாவைக் கைப்பற்றினர்.

★ 1912-ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் கியூபாவில் இறங்கினர்.

★ 1946-சிக்காகோவில் உணவுச்சாலை ஒன்று தீப்பிடித்ததில் 61 பேர் உயிரிழந்தனர்.

★ 1956-இலங்கையில் சிங்களச் சட்டம் மட்டும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

★ 1959-சிங்கப்பூரின் முதலாவது அரசு பதவியேற்றது.

★ 1967-இஸ்ரேலிய வான்படையினர் எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகியவற்றின் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1968- ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி வேட்பாளர் றொபேர்ட் கென்னடி பாலஸ்தீனர் ஒருவனால் சுடப்பட்டார். இவர் அடுத்த நாள் உயிரிழந்தார்.

★ 1969- அனைத்துலக கம்யூனிஸ்டுகளின் மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.

★ 1977-செஷெல்சில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

★ 1977-முதலாவது தனிக்கணனி அப்பிள் II விற்பனைக்கு விடப்பட்டது.

★ 1979-இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி அரசுடமையாக்கப்பட்டது.

★ 1984-இந்தியப் பிர்தமர் இந்திரா காந்தி சீக்கியர்களின் பொற்கோயில் தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்.

### பிறப்புக்கள்

★ 1898-ஃவெடரிக்கோ கார்சியா லோர்க்கா, ஸ்பானிய எழுத்தாளர் (இ.1936)

★ 1925-வ.அ.இராசரத்தினம், ஈழத்து எழுத்தாளர்

★ 1975-சிட்ருனாஸ் இல்கவுச் காஸ், லித்துவேனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புக்கள்

★ 1910-ஓ ஹென்றி, அமெரிக்க எழுத்தாளர் (பி.1862)

★ 2002-மு.சிவசிதம்பரம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்.

★ 2004-கே.கணேஷ், எழுத்தாளர் (பி.1920)

### சிறப்பு நாட்கள்

★ உலக சுற்றுச்சூழல் தினம்

★ டென்மார்க்-அரசியல் நிர்ணய தினம்



★ 2004-அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரோனால்டு ரேகன் நினைவு தினம் (பி.1911)

# மஹிந்தவுக்கு தண்டனை கிடைக்கும்வரை உலகத் தமிழர்கள் ஓயக்கூடாது

## பெ. மணியரசன் வலியுறுத்து

(புதுடில்லி)

**தமிழீழ மண்ணில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஈழத்தமிழ் மக்களை இனப்படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதிக்கும் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை வாங்கித்தரும் வரை உலகத் தமிழர்கள் ஓயக்கூடாது என தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் தோழர் பெ.மணியரசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாளை புதன்கிழமை லண்டனில் பொதுநலவாய நாடுகளின் வர்த்தக மாநாடு நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்ற வந்த மஹிந்தவை ஹீத்துரு விமான நிலையத்தை விட்டு இறங்க விடாத அளவிற்கு வீரத்துடன் போராடிய பிரித்தானியாத் தமிழ் மக்களுக்கு தற்போது மீண்டும் அதேபோன்று விரட்டியடிக்கும் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இலங்கை ஜனாதிபதிக்கு தண்டனை கிடைக்கும் என நம்பும் வகையில் அண்மையில் ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த லைபீரிய முன்னாள் ஜனாதிபதி சார்லஸ் டைலர் என்ற கொடுங்கோலனுக்கு 50 ஆண்டுகள் வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த மார்ச் மாதத்தில் ஐ.நா.மனித உரிமை அவையில் இலங்கையின் போர்க்குற்றங்கள் விசாரிக்க வேண்டுமென பல்வேறு நாடுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

உலக நாடுகள் மத்தியிலும் மனித நேய மற்றும் ஜனநாயக சக்திகள் மத்தியிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதியை லண்டனில் விரட்டியடித்து பிரித்தானிய புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் வரலாறு படைக்க வேண்டும். அவர் விரட்டியடிக்கப்படும் போது ஈழத்தமிழினப் படுகொலையை உலகம்மேலும்கூர்ந்துகவனிக்கும். உலகம் உரிய நடவடிக்கை எடுக்கும். பிரிட்டனிற்கு வருகை தரும் இலங்கை ஜனாதிபதியை பிரித்தானிய தமிழ்மக்கள் வீரத்துடன் விரட்டியடிக்க வேண்டும் என உரிமையோடும் உறவோடும் தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# டிரான் அலஸ் ஆலோசனைப்படி பொன்சேகா செயற்படக்கூடாது

## புதிய சிஹல உறுமய ஆலோசனை

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான்அலஸின் ஆலோசனைக்கு அமைய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா செயற்படக்கூடாது என புதிய சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்துள்ளார்.

கூடிய விரைவில் பொதுவான எதிர்க்கட்சியில் சரத் பொன்சேகா இணைந்து கொள்ள வேண்டும். டிரானின் ஆலோசனைக்கு அமைய செயற்பட்டால் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர் சிறிசேன குரேவிற்கு நேர்ந்த கதி சரத் பொன் சேகாவிற்கும் நேரும்.

சரத் பொன்சேகாவிற்கு நாட்டு மக்களிடையே சிறந்த நன்மதிப்பு காணப்படுகின்றது. அதனைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையில் அவர் செயற்பட வேண்டும்.

தனியான மூன்றாம் தரப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் பயணம் செய்வது நடைமுறைச்சாத்தியமற்றது. பொதுவான எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வதே மிகவும் சிறப்பானது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதில்லை

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

பொலிஸார் சித்திரவதைகளை மேற்கொள்வதில்லை என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் சந்தேக நபர்கள் துன்புறுத்தப்படுவதாக சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது. பொலிஸ்நிலையங்களில்சித்திரவதைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக ஊடகங்களும் பொதுமக்களும் தவறான ஓர் பிரசாரத்தை மேற்கொள்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தலைமறைவான சந்தேக நபர்களை கைது செய்யும் போதும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் பொலிஸார் சில கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும். எனினும் இதனை சித்திரவதைச் சம்பவங்களாக ஒரு போதும் கருதமுடியாது.

மேலும் சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யக் கூடிய வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படுவது ஆரோக்கியமானது எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-7)

# அடைவு மட்டத்தை அதிகரிக்க பரீட்சைகள்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடப்பாண்டில் க.பொ.த உயர்தரப்பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் தமிழ்ப்பாட அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் வடமாகாணக்கல்வித் திணைக்களத்தால் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

இதன்போது பரீட்சை வினாத்தாளின் 4 ஆவது தொகுதிப் பரீட்சையின் பகுதி I நாளை புதன்கிழமையும் பகுதி II நாளை மறுதினம் வியாழக்கிழமையும் காலை 8.30 மணி முதல் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளிலேயே நடைபெறவுள்ளது என துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் நிறைவு பெற்றதும் பாட ஆசிரியர்கள் புள்ளிப் பகுப்பாய்வை எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் துணுக்காய் கல்வி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-7-15)

# மஹிந்த சிந்தனையால் தேசிய ஒற்றுமையாம்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

மஹிந்த சிந்தனையின் கீழ் தேசிய ஒற்றுமை கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலையில் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த நிலையிலேயே அவர் இதனை தெரிவித்திருந்தார்.

நீர்ப்பாசனத் துறையின் ஊடாக தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இரசாயன உர வகைகளை கொண்டு விவசாயம் செய்யப்படுமானால் அதற்கு கூடிய மானியத்தை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

(அ-2)

# துமிந்த சில்வா நாடு திரும்புவார்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வா அடுத்த மாதமளவில் நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொலன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இவர் படுகாயமடைந்திருந்தார். படுகாயமடைந்த துமிந்த சில்வா மேலதிக சிகிச்சைக்காகச் சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.


எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதியளவில் துமிந்த சில்வா நாடு திரும்புவார் என அவரது இணைப்புச் செயலாளர் ஹேவாவித்தாரண தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் 19 ஆம் திகதி சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் தற்போது உடல் நிலை தேறி வருவதாகவும் தெரிவித்துள்ளார். மீண்டும் அரசியலில் ஈடுபடும் அளவிற்கு குணமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் படுகொலை வழக்கின் பிரதான சந்தேக நபராக துமிந்த சில்வா பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-7)





**வடமாகாணக் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வினாடிவினாப்போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வெற்றியீட்டிய குழுவிற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.** (படங்கள்:–என்.குமார்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 148

### எதிர்ப்பு இயக்கத்தின் வளர்ச்சி

சோவியத்- ஜேர்மனிய போர் முனையில் சோவியத் இராணுவத்தின் வெற்றிகள் மற்றும் நேச நாட்டத்துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்தது அகியவற்றின் தாக்கத்கத்தினால் 1944 ஆம் ஆண்டு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் எதிர்ப்பு இயக்கம் உச்ச கட்டத்தை அடைந்தது. உதாரணமாக யுக்கோஸ்லாவிய, கிரேக்க மற்றும் அல்பேனிய மக்கள் விடுதலை இராணுவங்கள் (1944 இல் இவற்றில் 4 இலட்சத்து 50 ஆயிரம் ஆட்கள் வரை இருந்தனர்) தமது தீவிர நடவடிக்கைகளால் 19 எதிரி டிவிஷன்களை கட்டிப்போட்டன. பிரான்சில் எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 5 இலட்சம் பேர்கள் 7-8 பாசிச டிவிசன்களை கட்டிப்போட்டனர். போலந்து, செக்கோச்சிலாவாக்கியா மற்றும் பாசிச ஜேர்மனியத்துருப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்ட மற்ற ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றின் கெரில்லாப்படை இயக்கம் வளர்ந்து பரந்தது. மொத்தமாக ஐரோப்பிய நாடுகளில் சுமார் 20 இலட்சம் தேசபக்தர்கள் ஆயுதமேந்திப்போரிட்டனர்.

விடுதலை இயக்கத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் இராணுவ நடவடிக்கைகள் அதிகப்பெரிய அணிகளாலும் யூனிட்டுகளாலும் நடத்தப்பட்டதாகும். பல நாடுகளில் எதிர்ப்பு இயக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நிரந்தர துருப்புகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு அதிக நெருக்கமானதாகவும் நேரடியானதாகவும் மாறியது. போராட்டப்போக்கில் மக்களாட்சியின் தலைமறைவு உறுப்புகள் தோன்றி வளர்ந்தன.

சோவியத்யூனியனின் எல்லைகளுக்கு அப்பால் சோவியத் துருப்புகள் வெற்றிகரமாகத் தாக்கி வந்த சூழ்நிலைகளில் பல நாடுகளில் பாசிச எதிர்ப்பு இயக்கம் தன் உயர் வடிவமாகிய பொதுமக்களின் ஆயுத எழுச்சிகளாக வளர்ச்சியடைந்தது. ருமேனியாவில் 1944 ஆகஸ்டு 23-இல் மக்கள் ஆயுத எழுச்சியும் பல்கேரியாவில் 1944 ஆம் ஆண்டு செப்ரெம்பர் ஆயுத எழுச்சியும் 1944 ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் ஸ்லொவாக்கிய தேசிய எழுச்சியும் வெடித்தன.

பல்வேறு ஜனநாயக கட்சிகள், ஸ்தாபனங்களுடன் கூட்டாக இயங்கிய கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள்தான் எதிர்ப்பு இயக்கத்திற்கு ஊக்கமூட்டி, ஒழுங்கமைத்து அதில் தீவிர பங்கேற்றன. உழைப்பாளிகளின் அடிப்படை நலன்களைப் பாதுகாப்பதிலும் ஏகாதிபத்தியம் மற்றும் இதனால் தோற்றுவிக்கப்பட்ட பாசிசம் ஆகியவற்றின் பிற்போக்கு சாரத்தை அம்பலப்படுத்துவதிலும் விடுதலை இயக்கத்தை வளர்ப்திலும் இவைதான் மிக உறதியானவையாக இருந்தன. பாசிசத்தை வேரோடு அறுத்தெறியவும் தம் நாடுகளின் சமூக வாழ்வை ஜனநாயகமாக்கவும் பாசிச ஜேர்மனிக்கு எதிரான போராட்டத்தில் இந்நாடுகள் தீவிரப்பங் கேற்பதற்காகவும் கம்யூனிஸ்டுகள் உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் போராடினர்.


கனேடிய இராணுவம்- பெல்ஜியத்தில்-1944

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

1944 ஆம் ஆண்டு பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம் மற்ற நாடுகளில் எதிர்ப்பு சக்திகள் மேற்கொண்டு உறுதியடந்தன.

பிரான்சில் 1943 மேயில் தோற்றுவிக்கப்பட்ட தேசிய எதிர்ப்பு கவுன்சில், 1944 மார்ச் 15 இல் எதிர்ப்பு இயக்க செயற்றிட்டத்தை நிறைவேற்றியது. இது பிரான்சை விடுவிப்பதற்கான போராட்டத்தின் உடனிடிக் கடமைகளை சுட்டிக் காட்டியது. நாடு விடுதலையடைந்தபின் நாட்டுப் பொருளாதார, ஜனநாயக வளர்ச்சியின் வாய்ப்புகளை முன்னறிவித்தது. 1944 வசந்த காலத்தில் எதிர்ப்பு இயக்கத்தின் போராட்ட ஸ்தாபனங்கள் ஒன்றிணைந்து பிரெஞ்சு உள்நாட்டுச் சக்திகளின் ஐக்கிய படை ஒன்றை உருவாக்கின. இதில் தலைமைப் பாத்திரம் கம்யூனிஸ்டுகளின் கரங்களில் இருந்தது. பிரெஞ்சு தேசபக்தர்கள் பாரிஸ், லியோன், கிரெனோப்பில், இன்னும் சில பெரிய நகரங்கள் உட்பட பிரான்ஸ் நாட்டின் பரப்பில் பெரும் பகுதியை விடுவித்தனர்.

ஜேர்மனிய இராணுவத்துடன் தொடர்படையவர்களாக இருந்த பெண்கள் கைதுசெய்யப்பட்டு பிரான்சின் விடுதலைப்படையால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்



இத்தாலியில் 1944 கோடையில் 1 இலட்சத்திற்கும் அதிகமானோர் அடங்கிய விடுதலைப் போராட்டத்தில் வாலன்டியர் கோர்பஸ் என்ற தேசபக்தர்களின் படை தோன்றியது. இத்தாலிய தேசபக்தர்கள் வட இத்தாலியின் பரவலான பிரதேசங்களை அக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தனர். நகரங்களிலும் கிராமங்களிலும் தேசபக்த இயக்கக் குழுக்கள் உருவாயின. 1944-1945 குளிர் காலத்தில், வடக்கு இத்தாலியின் தொழிற்றுறை மையங்களில் வெகுஜன வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 1945 ஏப்ரல் சர்வபொது வேலை நிறுத்தம் தொடங்கி, இது பொதுமக்கள் எழுச்சியாக வளர்ந்தது. இது இங்கே பிரிட்டிஸ்-அமெரிக்கத் துருப்புகள் வரும் முன்னராகவே வடக்கு மற்றும் மத்திய இத்தாலி பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்கப்படுவதில் முடிந்தது.



பிரான்ஸ் விடுதலைப்படை வீரர்கள்

பெல்ஜியத்தில் 1944 கோடைவாக்கில் 50 ஆயிரம் வரையிலான கெரில்லாப்படை வீரர்கள் இயங்கினர். இவர்களின் ஆயுதப்போராட்டம் பொதுதேசிய எழுச்சியில் முடிந்தது. இந்த எழுச்சி செப்ரெம்பரில் நாடுமுழுவதும் பரவியது.

கிரீஸில் 1941 செப்ரெம்பரில் தோற்றுவிக்கப்பட்ட தேசிய விடுதலை முன்னணி விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியது. தொழிலாளர்களும் விவசாயிகளும் இந்த முன்னணியின் உட்கருவாக இருந்தனர். 1941 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தோன்றிய கெரில்லாப்படை அணிகள் தேசிய விடுதலை இராணுவமாக ஒன்றிணைந்தன. இது விடுதலைக்காகவும் நாட்டின் சுதந்திரத்திற்காகவும் தன்னலமின்றி போரிட்டது. இந்த இரண்டு அமைப்புகளிலும் தலைமைப்பாத்திரம் கிரீஸ் கம்யூனிஸ்டுக் கட்சியிடமிருந்தது.


(தொடரும்)

# நீச்சலடிக்க கட்டிய தடாகத்தில் மாண்டுபோன சிறுபறவை



நடிப்பாற்றலை வெளிப்படுத்தி தனது பாடசாலைக்குப் பெருமை தேடிக் கொடுக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த வவுனியாவைச் சேர்ந்த யோகேஸ்வரன் கிரிதரன் என்ற மாணவன் நீச்சல் தடாகத்தில் மூழ்கி உயிரிழந்து போன சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்று வரும் மாகாண மட்ட நாடகப் போட்டியில் பங்கு பற்றுவதற்கென வருகை தந்திருந்த வவுனியா தமிழ் மகா வித்தியாலத்தில் தரம் 10 இல் கல்வி கற்று வந்த யோகேஸ்வரன் கிரிதரன் என்ற 15 வயதேயான மாணவன் தனது சக மாணவர்களுடன் யாழ். மத்திய கல்லூரியிலுள்ள நீச்சல் தடாகத்தில் குளித்து விளையாடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி மூச்சுத் திணறி பரிதாபமாக உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் மீட்கப்பட்டிருந்தான்.



போட்டியில் பங்குபற்றுவதற்கென வருகை தந்திருந்த கிரிதரன் உள்ளிட்ட வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள், வெளி மாவட்டங்களிலுள்ள ஏனைய பாடசாலை மாணவர்களும் யாழ். மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

மாணவர்களின் விளையாட்டுத்தனத்தினால் நீச்சல் தடாகத்தில் குளிக்க வேண்டும் என்ற விபரீத முடிபு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிபு மாணவன் கிரிதரனின் வாழ்க்கையையும் முடிபுக்கு கொண்டு வந்து விட்டது.

மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டு எமது மகன் யாழ்ப்பாணம் சென்றுள்ளான் என்று பெருமைப்பட்டுக் கொண்ட பெற்றோருக்கு மகன் உயிரிழந்த தகவல் பேரடியாக சென்றடைந்தது.

நள்ளிரவு வேளையில் யாருக்கும் தெரியாமல் நீச்சல் தடாகத்தில் குளித்துக் கொண்டிருந்ததை உயிரிழந்த மாணவனுடன் சென்ற ஏனைய இரண்டு மாணவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

நீச்சல் தடாகத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியைத் தாண்டியே தாம் சென்றதாகவும் விசாரணையின் போது பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

மின்குமிழ்கள் அணைக்கப்பட்டிருந்ததனால் குளித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்குகூட கிரிதரன் நீரில் மூழ்கியது அறிந்திருக்க வாய்ப்பில்லை.

மாணவனின் உயிரிழப்பை பறித்த இந்த நீச்சல் தடாகம் கட்டாயம் தேவையான ஒன்றா என்ற கேள்வி இந்த நீச்சல் தடாகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்த போது பலதரப்பட்டவர்களினாலும் எழுப்பப்பட்டிருந்தது.

அந்தக் கேள்விக்கு பதிலை வவுனியாவில் பிறந்த யாழ்ப்பாணத்தில் இறந்து போன மாணவன் கிரிதரன் கொடுத்துள்ளான்.

இந்த மாணவனின் உயிரிழப்புடன் நீச்சல் தடாகத்தில் ஏற்படும் உயிரிழப்புக்கள் தடுக்கப்படுமா என்ற இன்னொரு கேள்வியும் பலரது மனங்களிலும் தற்போது ஏற்பட்டுள்ளது.

நீரில் மூழ்கி உயிரிழந்த பல சம்பவங்கள் இங்கு முன்னரும் இடம்பெற்றுள்ளது. இந்த உலகில் பல்லாயிரக்கணக்கானவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த உயிரிழப்புக்களை விபத்தாகவே எடுத்துக் கொள்ள முடியும். இதற்கு எவர் மீதும் குற்றம் சாட்ட முடியாது என வாதிடுபவர்கள் உள்ளனர்.


யாழ். மத்திய கல்லூரியில் உள்ள நீச்சல் தடாகத்தில் மரணித்துப்போன வவுனியாவைச் சேர்ந்த மாணவன் கிரிதரனுக்கு நேர்ந்ததும் விபத்தே. இதைப் பெரிதுபடுத்தமுடியாது எனக் கூறுபவர்களும் உண்டு.

இருப்பினும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் இடம்பெற்ற நீண்ட யுத்த அழிவுகளை எதிர்கொண்ட வடக்கு மாகாணத்தில் எந்தத் துறையிலும் முழுமையான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

வன்னியில் இடம்பெற்ற பாரிய யுத்த அழிவுகளிலிருந்து மீள முடியாது எத்தனையோ குடும்பங்கள் இன்றும் அங்கலாயித்து வருகின்றன.

பெற்றோரை இழந்த நிலையில் அநாதைகளாக சிறுவர் இல்லங்களில் உதவிகளுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் சிறார்களின் எதிர்காலத்தை வளப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பாராமுகமாக இருக்கும் இலங்கை அரசாங்கத்திடம் நீச்சல் தடாகம் வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது வேடிக்கையானதே.

அந்தக் கோரிக்கையை உலக நாடுகளிடம் கடனுதவி பெற்று அரசாங்கம் உடன் நடைமுறைப்படுத்தியது அதை விட வேடிக்கையான ஒன்று. நீரில் மூழ்கி மாணவன் உயிரிழந்து போனதை விபத்தாக கருதினாலும் இவ்வாறான விபத் துக்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.



உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ளும் முகமாக உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அந்தப் பாதுகாப்புக்களைத் தாண்டி யாருக்கும் தெரியாமல் நீச்சல் தடாகத்தில் மாணவர்கள் குளிக்கச் சென்றதையும் நியாயப்படுத்த முடியாது.

எவ்வாறாயினும் யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் வவுனியா மாணவன் கிரிதரனின் உயிரைப் பறித்து விட்டது.

உரிய பாதுகாப்பு மேற்கொள்ளப்படாமையே இதற்கு முக்கிய காரணம் என பல தரப்பட்டவர்களினாலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை தவிர்த்துக் கொள்ள முடியாது.

எதிர்காலத்தில் இவ்வாறான உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது பலரது கோரிக்கையாகவுள்ளது.

**எஸ்.ஆர்.கரன்**

## யார் மீதும் குற்றம் சாட்ட முடியாது



வவுனியாவைச் சேர்ந்த மாணவன் ஒருவனின் சடலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்திலிருந்து மீட்கப்பட்டதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்தார். சடலமாக மீட்கப்பட்ட மாணவன் வவுனியா தமிழ் மகா வித்தி யாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்று வந்த யோகேஸ்வரன் கிரிதரன் எனவும் இவரது தந்தையார் வவுனியா விவசாயத் திணைக்களத்தில் பணிபுரிந்து வருகிறார் எனவும் எரிக் பெரேரா தெரிவித்திருந்தார்.

நள்ளிரவு வேளை என்பதனால் மாணவர்கள் நீச்சல் தடாகத்திற்கு குளிக்கச் சென்றதை யாரும் அறிந்திருக்கவில்லை.

கிரிதரன் நீரில் மூழ்கி உயிரிழந்த பின்னரே எமக்கு தகவல் வழங்கப்பட்டது. தகவல் அறிந்து நாம் அங்கு செல்ல முன்பு மாணவன் இறந்து விட்டான். இதனை ஒரு விபத்துச் சம்பவமாகவே கருத முடியும். இதற்கு எவர் மீதும் குற்றம் சுமத்த முடியாது. இருப்பினும் மாணவனின் உயிரிழப்பு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் நீச்சல் தடாகத்தில் மூழ்கி உயிரிழந்த மாணவன் கிரிதரனுடன் குளிக்கச் சென்ற ஏனைய இரண்டு மாணவர்களிடமும் விசாரித்ததன் ஊடாக இது தற்செயலாக நடந்த ஒரு விபத்தே என்பது தெரிய வந்தது. நீச்சல் தடாகத்தில் இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது எனக் கருதியே பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனைத் தாண்டி இந்த மாணவர்கள் சென்றுள்ளனர்.

மாணவனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்றார் பிரதிப் பொலிஸ் மா அதிபர்.

# நாட்பட்ட நீரிழிவு நோயினால் உண்டாகும் பாதிப்புகள்

**கேள்வி 16:- ஒருவர் தனது உடல் எடையில் அரைக்கிலோ குறைக்க வேண்டுமென்றால் அவர் சாப்பிடும் உணவில் எத்தனை கலோரிகள் இருத்தல் வேண்டும்?**

**பதில்:-** பொதுவாக ஒருவர் 3 ஆயிரத்து 500 கலோரிகள் பயன்படுத்த வேண்டும். இக்கலோரிகளை நடைப்பயிற்சி, மெதுவாக ஓடுதல் மற்றும் நீந்துதல் முதலிய உடற்பயிற்சிகளை தினமும் செய்வதன் மூலம் பயன்படுத்த வேண்டும். இதற்கு முறையான உடற்பயிற்சி அவசியமாகும். சாப்பிடும் உணவில் கலோரிகள் குறைவாக இருத்தல் வேண்டும். அதேசமயம் உடற்பயிற்சி மூலம் அதிகமான கலோரிகளைப் பயன்படுத்த வேண்டும்.

**கேள்வி 17:- இரண்டாம் வகை (Type II) நோயாளி ஏன் தனது உடல் எடையைக் குறைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்?**

**பதில்:-** இரண்டாம் வகை நோயாளிகளுக்கும் நீரிழிவு நோய் வருவதற்கு அவர்கள் உடலில் இன்சுலின் செயற்பாடு குறைவாக இருப்பதே காரணம் என்று கருதப்படுகிறது. இவர்களுக்கு உடல் எடை குறையும் பொழுது செயற்படாதிருக்கும். இன்சுலின் சுறுசுறுப்பாக செயற்பட தொடங்கும். அதனால் சீனி அளவு கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**கேள்வி 18:- கடுமையான உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் ஒருவர் திடீரென்று தன் உடல் எடையைக் குறைத்து விட்டாரென்றால் குறைத்த வேகத்திலேயே உடல் எடை திடீரென்று அதிகரிக்குமா?**

**பதில்:-** ஆம். விளம்பரங்களைப் பார்த்து எல்லோரும் தங்கள் உடல் எடையைக் குறைக்க விரும்புகின்றனர். எனினும் உடல் எடை எவ்வளவு வேகமாக குறைகிறதோ அதைவிட அதிக வேகத்தில் அதிகரிக்கின்றது என்பது தான் உண்மையாகும். இம்முறையில் தசைகளிலுள்ள கொழுப்பும் சேர்ந்து குறைகிறது. எனவே, ஒருவர் உடல் எடை அதிகரிக்கும் பொழுது கொழுப்பும் எக்கச்சக்கமாக அதிகரிக்கும். ஆகவே, எப்போதும் உடல் எடையை மெதுவாகக் குறைப்பதே ஆரோக்கியத்திற்கு வழியாகும்.

**நீரிழிவு நோயாளிகள் இன்சுலின் ஊசி போட்டுக் கொள்வதன் இன்றியமையாமை**

**கேள்வி 01:- நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த எத்தனை வழிகளில் இன்சுலின் பயன்படுத்த முடியும்?**

**பதில்:-** இன்சுலின் பற்றாக்குறையினால் தான் நீரிழிவு நோய் வருகிறது என்பது நீங்கள் அறிந்தததுதானே! இதன் காரணமாகவே நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த இன்சுலின் தேவை இன்றியமையாததாகிறது. இன்சுலின் 1921 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இன்சுலினை நாசித்துவாரத்தின் மூலம், ஊசியின் மூலம், இன்சுலின் விசைக் குழாய் மூலம், இன்சுலின் பேனா மூலம் உடலில் செலுத்தலாம்.

❖ நாசித்துவாரங்களினுள் இன்சுலின் சிதறலின் மூலம் (nasal spray) செலுத்தப்படுகிறது. நாசியிலுள்ள சளி இச் சிதறலை உட்கிரகிக்கிறது. இதன்மூலம் உடலிலுள்ள குளுக்கோஸ் அளவு கட்டுப்படுத்தப்படுகிறது.




**10**

❖ இரத்தத்தில் சீனி அளவு அதிகரிக்கும் பொழுது அதனைக் கட்டுப்படுத்த நோயாளிக்கு ஊசியின் மூலம் இன்சுலின் ஏற்றப்படுகிறது.

❖ இன்சுலின் விசைக்குழாய் என்பது ஒரு சிறிய இயந்திரமாகும். இது உடல் அருகே வைக்கப்பட்டு சிறிய ஊசி மற்றும் சிறிய குழாயின் மூலம் உடலினுள் இன்சுலின் ஏற்றப்படுகிறது. இதன்மூலம் நிர்ணயிக்கப்பட்ட இன்சுலின் அளவு உட்லினுள் செலுத்தப்படுகிறது. இது விலை அதிகம். சிகிச்சைக்கு அதிக செலவாகும். அதனால் இது நமது நாட்டில் பிரபலமாகவில்லை. இது பற்றரியின் மூலம் செயற்படுகிறது.

## டாக்டர்.A.K.ஜிங்கான்

❖ இப்பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காகவே இன்சுலின் பேனா (Insulin Pen) பயன்படுத்தப்படுகிறது. இதில் மை பயன்படுத்துவதற்கு பதிலாக இன்சுலின் பயன்படுத்தப்படுகிறது. நிப் பயன்படுத்துவதற்கு பதிலாக சிறிய முனையுடன் கூடிய ஊசி பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் நோயாளிகள் உடலில் இன்சுலின் செலுத்தப்படுகிறது. (தொடரும்)

# முதுகுவலி: ஏன் வருகிறது? எப்படி போக்குவது?

முதுகுவலி முதியவர்களுக்கு மட்டும்தான் வரும் என்றில்லை. இளைஞர்களையும் இப்போது பாடாய்படுத்திக் கொண்டிருக்கிறது. பெண்களும் முதுகுவலி, கழுத்து வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**முதுகின் கட்டமைப்பு எப்படி இருக்கிறது?**

**முதுகில் வலி உருவாக என்ன காரணம்?**

**வலி வராமல் தடுப்பது எப்படி, வந்தால் அதை குணப்படுத்துவது எப்படி? என்பதை விளக்கும் பதில் இது!**

❖ **தாய் வயிற்றில் கருவான எத்தனையாவது நாளில் சிசுவுக்கு முதுகெலும்பு உருவாகும்? முதலில் எப்படி தோன்றி படிப்படியாக வளரும்? முதுகெலும்பின் டிஸ்குகள் மற்றும் அதன் கட்டமைப்பு என்ன?**

முதுகெலும்பும் முதுகுத்தண்டும் கரு உருவான 18 ஆம் நாளிலிருந்தே உருவாக ஆரம்பிக்கும். முதலில் முதுகெலும்பு உருவாகி திறந்தபடி இருக்கும். கரு உருவான 29 ஆவது நாள் மூடிக்கொள்ளும்.அதன் நடு மையத்தில் மூளையின் தொடர்ச்சியான தண்டு வடம், இடுப்பு பகுதி வரையில் நீண்டு இருக்கும்.

முதுகெலும்பு ஒன்றுடன் ஒன்றாக இணைக்கப்பட்ட 33 சிறு துண்டு எலும்புகளைக் கொண்டது. இதில் முதல் 7 எலும்புகள் கழுத்து பகுதியிலும் (செர்வைக்கல்), 12 எலும்புகள் மார்பு பகுதியிலும் (தொராசிக்), 5 எலும்புகள் ஒன்றோடொன்று இணைந்த நிலையில் அடி முதுகுப்பகுதியிலும் (சேக்ரல்) கடைசி 4 எலும்புகள் சேர்ந்து ஒரே எலும்பாய் முதுகின் அடி பகுதியிலும் (காக்சிஸ்) அமைந்து உள்ளது. இவற்றில் கடைசி 9 எலும்புகள் அசைவற்றதாகவும் இதர 24 எலும்புகள் அசையக்கூடியதாகவும் இருக்கும். எலும்புகளுக்கிடையில் மெல்லிய ஜவ்வு போன்ற டிஸ்க் பகுதி அமைந்துள்ளது.

இந்த டிஸ்க்குகள் உடலில் ஏற்படும் அதிர்வை தாங்கிக் கொள்ள பயன்படுகிறது. முதுகெலும்பு நேராக இல்லாமல் சில வளைவுகளுடன் இருக்கும். முதுகெலும்பின் நடுவில் இருக்கும் தண்டு வடத்தில் இருந்து 31 ஜோடி நரம்புகள் முதுகெலும்புகளுக்கிடையில் உள்ள துவாரத்தின் வழியாக வெளியேறி உடலின் பல முக்கிய உறுப்புகளுக்கு சென்று செயற்பட வைக்கிறது.


❖ **எத்தனை வயது வரை முதுகெலும்பு வளரும்? வேகமாக வளரும் காலகட்டம் எது?**

குழந்தை பிறந்ததில் இருந்தே எலும்புகளின் வளர்ச்சி வேகமாகவும் சீராகவும் இருக்கும். எலும்பின் வளர்ச்சி 18 வயது வரையில் வேகமாகவும் அதன்பின் 25 வயது வரை மிதமாகவும் இருக்கும்.

❖ **முதுகெலும்பின் அமைப்பில் ஆண்-பெண்ணுக்கு வித்தியாசம் ஏதாவது இருக்கிறதா?**

முதுகெலும்பின் அமைப்பிலோ செயற்பாட்டிலோ ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் இல்லை. ஆனால், முதுகெலும்பின் வளைவுகளில் சிறு வித்தியாசம் இருக்கும். வளைவு ஆண்களை விட பெண்களுக்கு சற்று அதிகமாக இருக்கும்.

❖ **பெண்கள் கோலம் போடுதல், வீடு பெருக்குதல், துணி துவைத்தல் போன்ற**




**வேலைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு முதுகுவலி ஏற்படுமா?**

பெண்கள் 45-50 வயது வரை வீட்டு வேலைகளை செய்வது நல்லது. வீட்டு வேலைகளால் முதுகெலும்பிற்கோ எலும்புகளின் நடுவில் உள்ள டிஸ்கிற்கோ எந்த பாதிப்பும் வராது. ஆனால், முதுகெலும்பில் ஏதாவது பிரச்சினையோ நோயோ ஏற்பட்டிருந்தால் கடினமான வேலைகளை செய்யாமல் இருக்கவேண்டும். இடுப்பில் தண்ணீர் குடத்தை தூக்குவதாலும் குழந்தைகளை இடுப்பில் தூக்குவதாலும் பெண்களின் முதுகெலும்பில் பொதுவாக பாதிப்பு ஏற்படுவதில்லை.

❖ **கர்ப்பம், பிரசவத்திற்கு தக்கபடி பெண்களின் முதுகெலும்பு கட்டமைப்பில் ஏதேனும் மாற்றங்கள் இருக்கிறதா?**

பெண்களின் அடி முதுகு வளைவு அவர்களது கர்ப்பகாலத்தில் வயிற்றின் முன் பக்க வளர்ச்சிக்கு ஏற்ப பின்பக்கம் சாய்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. இதனால் வயிற்றில் குழந்தை வளர வளர முன்பக்க பாரத்திற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் பின்புறமாக சாய்ந்து கொண்டு கர்ப்பிணிகளால் அன்றாட வேலைகளை செய்ய முடியும். இதற்கு கர்ப்பகாலத்தில் சுரக்கும் ஓமோன்களும் உதவி புரிகின்றன.

❖ **முதுகுவலி தோன்ற எத்தனை விதமான காரணங்கள் இருக்கின்றன?**

முதுகெலும்புகளுக்கு இடையில் ஷாக் அசர்வர் போல் இயங்கும் டிஸ்க் என்னும் மெல்லிய ஜவ்வு வயதாவதாலோ காயம் பட்டத்தினாலோ அல்லது அழற்சியினாலோ தேய்ந்து விடும். அப்போது 2 எலும்புகளுக்கிடையே போதிய இடைவெளி இன்றி டிஸ்க் எலும்பை விட்டு வெளியே பிதுங்கி விடும். இதனால் அதன் அருகில் செல்லும் இரத்தக் குழாயையோ நரம்பையோ அழுத்தி வலியை உண்டு பண்ணும்.

வயதாகிய எலும்புகளில் தேய்மானம் ஏற்படுவதாலும் எலும்புகளுக்கிடையே சில தாதுக்கள் படிவதாலும் எலும்புகளுக்கிடையே உராய்வு ஏற்படும். இதனால் அழற்சியோ கிருமி தொற்றோ ஏற்பட்டு வலி ஏற்படும்.

உடலின் கல்சியம் சத்துக்களின் அளவு வயதாவதினாலோ பெண்களுக்கு மாதவிடாய் நின்ற பின்னரோ குறைந்து விடலாம். இதனால் எலும்புகளில் போதிய அளவு சுண்ணாம்பு சத்து இல்லாததால் எலும்புகள் வலுவிழந்து அடர்த்தி குறைவாகி விடும். இதனாலும் எலும்புகளில் வலியும் எலும்பு முறிவும் ஏற்படலாம்.

முதுகெலும்பு வலுவிழக்கும்போது வரிசையாய் இருக்க வேண்டிய எலும்புகளில் ஒன்றிரண்டு வரிசையிலிருந்து முன்புறமோ பின்புறமோ விலகிவிடும். இதனாலும் முதுகுவலியோ, முதுகு தசைப்பிடிப்போ, மரத்து போதலோ ஏற்படலாம். இது 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது.

மூட்டுகளில் ஏற்படும் அழற்சியே ஆர்தரைட்டிஸ். இது ருமடாய்டு ஆர்த்ரைட்டிஸ், ஆன்க்கிலோசில் ஸ்பான்டிலோசிஸ் போன்ற நோய்களின் விளைவால் ஏற்படக் கூடியதாக இருக்கும்.

❖ **மேடு, பள்ளம் நிறைந்த சாலைகளில் இரு சக்கர வாகன பயணம் மேற்கொள்வது முதுகுவலியை ஏற்படுத்துமா?**

முதுகெலும்புகளுக்கு நடுவில் உள்ள டிஸ்க் ஷாக் அ சர்வர் போல் செயற்பட்டு அதிக பளு தூக்குதல், குனிதல், குதித்தல் போன்ற சமயங்களில் அதிர்வுகளை தாங்கி கொள்ளும். ஆனால், டிஸ்க் தேய்ந்து விட்டாலோ அல்லது எலும்புகளில் வேறு பிரச்சினை இருந்தாலோ மேடு, பள்ளம் நிறைந்த சாலையில் செல்லும் போது டிஸ்க் அழுத்தப்பட்டு அழுத்தம் தாளாமல் வெளியே பிதுங்கி பக்கத்தில் உள்ள நரம்புகளை அழுத்தும். இதனால் வலி ஏற்படும்.

❖ **முதுகுவலி என்பது கழுத்து வலியும் சேர்ந்ததா? முதுகு வலிக்கும் போது கழுத்தும் சேர்ந்து வலிக்குமா?**

முதுகெலும்பில் எங்கு வேண்டுமானாலும் எலும்பு தேய்மானமோ அழற்சியோ டிஸ்க் ரொலாப்ஸோ ஏற்படலாம். இதனால் எங்கு வேண்டுமானாலும் வலி ஏற்படலாம். பொதுவாக கழுத்து எலும்பில் டிஸ்க் ரொலாபஸ் என்றால் கழுத்து, தோள்பட்டை, கைகளில் வலி பரவலாம். அதேபோல் அடி முதுகில் ரொலாபஸ் என்றால் அடிமுதுகு, இடுப்பு மற்றும் கால்களில் வலி ஏற்படலாம். இரண்டு வித வலியும் சேர்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை.

❖ **முதுகெலும்பின் அடர்த்தி குறைவு மற்றும் பிரச்சினைகளை வலி வரும் முன்பே கண்டுபிடிக்க முடியுமா?**

வலியின் அறிகுறி தெரியும் வரை முதுகெலும்பில் டிஸ்க் ரொலாபஸ் பிரச்சினையை கண்டுபிடிக்க முடியாது.

❖ **கழுத்து வலி மற்றும் முதுகு வலிக்கு இருக்கும் நவீன சிகிச்சை என்ன?**

பேக் அன்ட் நெக் கட்டமைப்பு மருத்துவத்தில் டிஸ்க் ரொலாபஸை அறுவை சிகிச்சையின்றி கட்டுப்படுத்தலாம். நவீன மருத்துவ முறையில் வடிவமைக்கப்பட்ட ஈதல் 9000 என்ற கருவி முதுகுவலிக்கும், ஈதல 9000இ என்ற கருவி கழுத்து வலிக்கும் சிகிச்சையளிக்க பயன்படுகிறது. இந்த சிகிச்சை முறை கிட்டத்தட்ட 86 சதவீதம் வரை வலியை குறைத்து நோயாளி தன் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப உதவும்.

❖ **உறுப்பு மாற்று சிகிச்சை இப்போது பரவலாக இருக்கிறதே. முதுகெலும்புகளை எடுத்து எலும்பு வங்கிகளில் சேகரிக்க முடியுமா? அதை மாற்று அறுவைசிகிச்சை மூலம் பாதிக்கப்பட்டவருக்கு பொருத்த முடியுமா?**

எலும்பு வங்கியில் எலும்புகள் சேமித்து வைக்கப்படுகிறது. ஆனால், முகுகெலும்புகள் சேமிக்கப்படுவதில்லை. மேலும் செயற்கை டிஸ்க்குகளை பயன்படுத்தி டிஸ்க் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால், முகுகெலும்பு மாற்று அறுவை சிகிச்சை இது வரை செய்யப்படவில்லை. அதேபோல் தண்டு வட பாதையோ தண்டு வடமோ வேறொருவரிடம் இருந்து மாற்றாக எடுத்து வைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் கிடையாது. இனி எதிர்காலத்தில் இதற்கான புது சிகிச்சை முறைகள் வரலாம்.



# சிறுவர் அரங்கம்

121

## உங்களுக்கும் இதுவே!

### அம்புலி மாமா கதைகள்

பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது போதிசத்வர் ஒரு குடியானவனின் வீட்டில் பிறந்தார். அவரது பெற்றோர் அவரை அருமை பெருமையாக வளர்த்து வந்தார்கள். அவனை



அவர்கள் ஆசையுடன் கூப்பிடுவதற்கு கமலாகரன் என்ற பெயரையும் வைத்தார்கள்.

கமலாகரன் சிறு வயதிலேயே மாபெரும் அறிஞனாகத் திகழ்ந்து வந்தான். அவனுக்குத் தன் தாத்தாவின் மீது அளவு கடந்த பாசம் இருந்தது.

அந்தத் தாத்தா மிகவும் வயதானவர். அவரால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. அவருக்கு மற்றவர்கள் பணிவிடை புரிய வேண்டி இருந்தது.

அவ்வாறு அவருக்குப் பணிவிடை செய்வது கமலாகரனின்



தாய்க்கு மிகவும் தொல்லையாக இருக்கவே அவள் கிழவருக்குச் சாவு வராதா என்று தினமும் பல முறை சொல்வாள்.

ஒருநாள் அவள் தன் கணவனிடம், என்னால் இந்தக் கிழத்திற்குப் பணிவிடை செய்ய முடியவில்லை. இவர் எப்போதுதான் சாவாரோ? எனக்குத் தொல்லை கொடுக்கவே இவர் தன் உயிரைப் பிடித்துக் கொண்டு இன்னமும் பல வருடங்கள் இருப்பார் போலிருக்கிறது. எல்லாம் என் தலைவிதி! என்றாள்.

இதைக் கேட்டு கமலாகரனின் தந்தை, அப்படியானால் என்ன செய்வது? அவரைக் கொன்று போட்டு விடலாம் என்றா சொல்கிறாய்? என்று கேட்டார்.

அப்படிக் கொன்றால் கூட நல்லது தான். என் தொல்லைகளுக்கு ஒரு விடிவு காலம் வரும்! என்றாள் கமலாகரனின் தாய்.

அந்தக் குடியானவன் அப்போது தன் தந்தையை எப்படிக் கொல்வது என்று தயங்கினான். ஆனால் அவனது மனைவி தினமும் அவனது தந்தையைப் பற்றிக் குறை கூறிக்கொண்டே இருந்தாள்.


முடிவில் அவனது மனைவியின் போதனை தலைக்கு ஏறியது. தன் தந்தையை யாருக்கும் தெரியாத இடத்திற்கு அழைத்துப் போய் கொன்று புதைத்துவிட்டு வருவது என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

மறுநாள் அவன் தந்தையிடம், அப்பா! அடுத்த ஊர்க்காரரிடம் நம் விவசாயத்திற்காகக் கடன் கேட்டு இருந்தேன். நீங்கள் வந்து சொன்னால்தான் அவர் கொடுப்பாராம்! ஆகையால் நீங்கள் என்னுடன் வரவேண்டும் வாருங்கள். நாம் இருவரும் நம் வண்டியில் போய் வரலாம்! எனக் கூறித் தன் வண்டியை ஓட்டி வந்தான்.

கிழவர் வண்டியில் ஏறி உட்கார்ந்ததும் கமலாகரனும் தன் தாத்தாவுடன் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டான். யார் என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை.

குடியானவன் வேறு வழியின்றி தன் தந்தையையும் மகனையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றான்.

அவர்கள் போகும் வழியில் ஒரு காடு இருந்தது. குடியானவன் ஓரிடத்தில் வண்டியை நிறுத்தித் தன் தந்தையிடம், இதோ ஒரு நிமிடத்தில் வருகிறேன்! எனச் சொல்லிவிட்டு வண்டியிலிருந்து ஒரு கடப்பாரையை எடுத்துக்



கொண்டு சற்றுத் தூரத்திலுள்ள ஒரு பெரிய மரத்தின் பின்னால் சென்றான்.

தன் தந்தை சென்றதும் கமலாகரனும் வண்டியிலிருந்து இறங்கி தாத்தா! நானும் ஒரு நிமிடத்தில் வருகிறேன்! எனக் கூறி மற்றொரு கடப்பாரையை வண்டியில் இருந்து எடுத்துக் கொண்டு தன் தந்தை சென்ற மரத்தின் பின்னால் சென்றான்.

அங்கு அவர் தன் தந்தை குழி தோண்டுவது கண்டு சற்றுத் தூரம் தள்ளித் தானும் குழி தோண்டலானான்.

அது கண்டு குடியானவன், நீ ஏன் குழி தோண்டுகிறாய்? என்று கேட்க அதற்கு அவன் நீங்கள் எதற்காகத் தோண்டுகிறீர்களோ அது போன்ற வேலைக்காகத் தான்! என்றான்.

அதற்குக் குடியானவன் என் தந்தைக்கு வயதாகிவிட்டது. அவர் திடீரென இறந்து விட்டால் அவரைப் புதைக்க வேண்டுமே என்பதற்காகத் தான் நான் இங்கு குழி தோண்டிக் கொண்டிருக்கிறேன்! என்றான்.

கமலாகரனும், அவர் இன்னமும் இறக்கவில்லையே! உயிருடன் தானே இருக்கிறார்! என்று கேட்க, அதற்குக் குடியானவன், உயிர் என்றென்றும் நிலைத்து இருக்காது! எந்த நிமிடத்திலும் போய்விடுமே என்றார்.

எனவே, போதிசத்வரும் நீங்கள் உங்கள் தந்தையை புதைக்க குழி தயார் செய்வது போல் நானும் உங்களைப் புதைக்க இந்தக் குழி தோண்டுகிறேன்! என்றார்.

குடியானவன் திகைத்துப் போனான். வெட்கத்தால் தலை குனிந்து தன் மகனை அழைத்துக் கொண்டு வண்டியில் ஏறி அதைத் திருப்பித் தன் ஊருக்கே ஓட்டினான்.

வண்டி வீட்டு வாசலில் நின்றதும் குடியானவன் நடந்ததை தன் மனைவியிடம் கூறவே அவள், நீங்கள் அருமை பெருமையாக வளர்த்த உங்கள் மகனா உங்களைப் புதைக்க குழி தோண்டினான்! என்ன அநியாயம்! என்றாள்.

அதற்குக் குடியானவன், என்னை என் தந்தை ஆசையுடன் வளர்த்தாரே அவருக்கு நான் குழி தோண்டவில்லையா? நம் மகன் எனக்கு நல்ல பாடம் கற்றுக் கொடுத்தான்! எனக் கூறி அன்றில் இருந்து அவன் கமலாகரன் அறிவுரைகளை எல்லாம் ஏற்று நடந்து வரலானான்.

# யாழில் மீள்குடியேறிய எம்மை வாழ விடுகிறார்கள் இல்லை

## முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் சகல தரப்பினர் மீதும் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களை வாழ விடுகின்றனர் இல்லை. இன, மத ரீதியாக தொடர்ந்து நெருக்கடி நிலைகளை முஸ்லிம் மக்கள் அனுபவித்துக் கொள்கின்றனர்.**

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு மணித்தியாலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் வெளியேற்றப்பட்ட நாம் மீள்குடியேற இங்குள்ள தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். ஒஸ்மானியா கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற முஸ்லிம் மக்களுக்கான சிவில் பாதுகாப்புக்குழு அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அங்கு அவர்களினால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்படும் போது 2 ஆயிரத்து 700 வீடுகள் இருந்தன. ஆனால் நாம் மீண்டும் இங்கு குடியேற வரும் போது ஒரு வீடு கூட ஒழுங்காக இல்லை.

இருப்பினும் இங்கு மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு அரசாங்கத்தினால் ஒரு வீடு கூட அமைத்துக்கொடுக்கப்படவில்லை.

தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களை மீள்குடியமர்த்த முன்வரவேண்டும். ஒருவர், இருவர் செய்யும் தவறுக்காக ஒட்டுமொத்த இனத்தையும் குற்றம் சாட்டுவது போல் இங்குள்ள ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

இது தவிர எமது வர்த்தக சமூகத்தினர் யாழ். நகர்ப்பகுதியில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுவதை பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் யாழ். மாநகர சபை ஊடாக பொலிஸ் நிலையத்திற்கும் நீதிமன்றத்துக்கும் என அலைய வைக்கின்றனர்.

இதனால் உழைத்த பணத்தை எல்லாம் அபராதமாக செலுத்துகின்றனர். யாழ். மாநகர சபையின் இந்த நடவடிக்கையை கண்டிக்கின்றோம்.

யாழ்ப்பாணத்திற்கு போதைப்பொருளை கொண்டு வந்தவர்கள் இராணுவத்தினரே. அதை நான் எங்கு வேண்டுமானாலும் வந்து சொல்வேன்.

போதைப்பொருள் விற்பனை போன்ற இழிவான தொழிலை செய்பவர்களுடன் பொலிஸார் நல்ல உறவை பேணி வருகின்றனர்.

முஸ்லிம் இனத்தவர்களிலும் இவ்வாறான இழிதொழிலை செய்பவர்கள் உள்ளனர். அதை நான் மறுக்கவில்லை.

பாரிய குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் எமது முஸ்லிம் சமூகத்திலிருந்தால் ஒரு மாதகாலத்திற்குள் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

கடந்த காலங்களில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளோம். அத்தோடு போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் விற்பனையில் எமது இனம் சார்ந்தவர்கள் யாராவது இருந்தால் அவர்களையும் தடுப்போம் என்றார் யாழ், கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத் தலைவர்.

இதேவேளை இந்த சிவில் பாதுகாப்பு குழு அமைப்பது தொடர்பான அங்குரார்ப்பண கூட்டத்தில் யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் கருத்து கூறுகையில்,

விடுதலைப்புலிகளின் கால கட்டத்தில் தென்பகுதியில் ஒரு தமிழ் இளைஞன் பிடிபட்டால் அப்பகுதி ஊடகங்கள் விடுதலைப்புலி உறுப்பினர் கைது செய்யப்பட்டார் என கூறுவது வழக்கம்.

அதேபோன்றுதான் முஸ்லிம் இனத்தவர்களில் ஒருவர் செய்யும் தவறைக்கூட முஸ்லிம் இனத்தவர்கள் அனைவரும் சேர்ந்து செய்த தவறாக இங்குள்ள ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

இது முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு பாரிய தடையாகவுள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் அனுபவித்த துன்பத்தை தற்போது முஸ்லிம் மக்கள் அனுபவித்துக்கொண்டுள்ளனர்.

முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ விரும்புகின்றனர். இன, நல்லுறவை ஏற்படுத்த ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

மேலும் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு அமைச்சர்கள், யாழ். மாநகர சபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலர், இங்குள்ள ஊடகங்கள் எல்லோருமே தடையாகவே உள்ளனர்.

எம்மை இங்கு வாழ விடுகின்றனர் இல்லை என சரமாரியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இந்த சிவில் பாதுகாப்பு குழு அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றியவர்கள் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த நிகழ்வில் யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் மா. கணேசராசா பிரதமவிருந்தினராக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-6)

# தெரிவுக்குழுவில் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது குறித்து எதிர்க்கட்சிகளுக்கு அறிவிக்கவில்லை

## ஜோன் அமரதுங்க எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு இன்னும் எதிர்க்கட்சிகளுக்கு அறிவிக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாக அறிவிக்கப்படாத காரணத்தினால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இறுதி இணக்கத்தை ஏற்படுத்தி பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளை பெயரிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தல், 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு அமைய அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பாக முதலில் பேசப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை உள்ளடக்கி பேச்சுக்களில் பேசப்பட வேண்டிய விடயங்கள் அடங்கிய நிகழ்ச்சி நிரலை அரசாங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளோம்.

இதன் அடிப்படையில் இரண்டு தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிகழ்ச்சி நிரலை தயாரித்து அதனை அரசாங்கம் அறிவித்த பின்னர் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கான பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## தேசிய மட்டத்திற்கு தெரிவானார்



(மன்னார்)

மன்னார் துட்சணா மருத மடு அ.த.க. பாடசாலை மாணவி செல்வி சயந்தினி செல்வரட்ணம் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட தமிழ்த்தினப்போட்டியில் இசையும் அசைவும் நிகழ்வில் முதலாம் இடத்தைப்பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இவர் இப்போட்டியில் வலயமட்டம், மாவட்டமட்டம், ஆகியவற்றிலும் முதலாமிடத்தைப்பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## மாகாண மட்ட போட்டிக்கு தெரிவானோர் விபரம்

(முல்லாவி)

வடமாகாண கல்வித்திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான சித்திரப்போட்டியில் துணுக்காய் கல்வி வலயத்தால் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விபரத்தினை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டியில் பங்கேற்று வெற்றியீட்டிய மாணவர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள மாகாணமட்ட போட்டியில் பங்குபற்ற முடியுமென அவர் கேட்டுள்ளார்.

மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

தரம்-01

சபேசலிங்கம் கலைவிழி (மு/வவுனிக்குளம் படிவம்-4 அ.த.க. பாடசாலை)

தரம்-2

கேசவன் அபினேகா ( மு/ கருவேலங்கண்டல் அ.த.க. பாடசாலை)

தரம்-03

தங்கபூரணம் எயுயினி (மு/ அனிச்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்)

தரம்-04

ரவிச்சந்திரன் கிருசாந்தினி (மு/ நெட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை)

தரம்-05

பத்மநாதன் அகிலன் (மு/முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை) (அ-2-15)

## மரணதண்டனையை மாற்றியது மேன்முறையீட்டு நீதிமன்றம்

அநுராதபுர நீதிமன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஆறு பேருக்கு மேன்முறையீட்டின் அடிப்படையில் விடுதலை கிடைக்கப்பெற்றுள்ளது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட ஆறுபேரும் இந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தனர். இந்த மனுவை பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதவான்கள் குறித்த ஆறுபேரும் குற்றமற்றவர்கள் என தீர்ப்பளித்தனர்.

கடந்த 1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி நபர் ஒருவரை கொடூரமான முறையில் தாக்கிப்படுகொலை செய்த குற்றத்திற்காக குறித்த ஆறுபேருக்கும் அநுராதபுர நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.

சம்பவம் தொடர்பில் நேரில் கண்டகாட்சி ஒருவரே எனவும் உயர்நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்தச் சாட்சியாளரும் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சாட்சியாளரின் சாட்சியத்தின் அடிப்படையிலேயே மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தச்சாட்சியை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதன்படி மரணதண்டனை விதிக்கப்பட்ட ஆறுபேரும் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டனர். இவ்விசாரணைகளை டப் ரஞ்சித் பெரேரா மற்றும் நலின் டி சில்வா ஆகிய நீதவான்கள் இந்த மனுவை பரிசீலனை செய்தனர். (அ-2)

# மஹிந்தவின் லண்டன் வருகையை கண்டித்து ஹீத்ரோ விமான நிலையம் முற்றுகை

இலங்கை ஜனாதிபதி மஹிந்த நேற்று முன்தினம் பிரித்தானியா சென்ற தக்வலை அடுத்து ஈழத் தமிழர்கள் ஹீத்ரோ விமான நிலையத்தில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பிரித்தானியா வாழ் தமிழீழ மக்கள் ஹீத்ரோ விமான நிலையத்தை முற்றுகையிட்டு மஹிந்தவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பி தமிழின உணர்வுகளுடன் புலிக் கொடிகளையும் கைகளில் தாங்கியவாறு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாக தெரியவருகின்றது.

ஏனைய பயணிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. வழமையை விட கூடுத லான பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும் குளிர் மழையையும் பொருட்படுத்தாது மஹிந்தவை லண்டனுக்குள் காலடி வைக்கவிடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கு வலுச்சேர்க்கும் எல்லா தமிழ் உறவுகளையும் அணிதிரண்டுவருமாறு அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கடந்த 2010 இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்ற பிரித் தானியாவுக்குச் சென்ற மஹிந்தவுக்கு எப்படியான நெருக்கடிகளைக் கொடுத்து உரையாற்றாமல் அவமானப்படுத்தி திருப்பி இலங் கைக்கு அனுப்பப்பட்டதோ அதேபோன்று இம்முறையும் ராணியின் முடி சூட்டும் வைரவிழா விலும் கலந்து கொள்ளாமல் தடுத்து மீண்டும் இலங்கைக்கு அனுப்ப நடவடிக் கைகள் எடுக்க வேண்டும். ஆகவே அனை த்து தமிழ் உறவுகளும் இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு வலுச்சேர்க்குமாறு தமிழ் அமைப்புகள் கேட்டுள்ளன. (அ-2)

# அந்தணர் அல்லாதோருக்கான இருவார வதிவிட செயலமர்வு

(பூநகரி)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வடபகுதி சைவ ஆலயங்களில் பூசகராக கடமையாற்றும் அந்தணர் அல்லாதோருக்கான இரண்டு வார வதிவிடப் பயிற்சி நெறி எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் பூசகர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு ஆலயப் பரிபாலன சபையினர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. (அ-7-84)

# பிரிட்டன் பிரதமரை சந்திக்கும் மஹிந்தவின் முயற்சி தோல்வி!

பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனை சந்திக்க விருப்பம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக பிரித்தானிய வெளியுறவுத்துறை பணியகத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சினூடாக தகவல் பரிமாறப்பட்டுள்ளது. ஆனால் பிரித்தானியப் பிரதமர் கமரூனை ஜனாதிபதி மஹிந்த சந்திப்பதற்கு எந்த ஒழுங்குகளும் செய்யப்பட்டதாக தெரியவில்லை.


சந்திப்பை உறுதி செய்யும் அதிகார பூர்வ தகவல்கள் எதையும் ஜனாதிபதி கொழும்பிலிருந்து லண்டன் புறப்படும் வரை பிரித்தானிய அரசாங்கம் அனுப்பவில்லை. இது இலங்கை அரச தரப்புக்கு ஏமாற்றமளித்துள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனை தனியாகச் சந்திப்பதற்கு ஒழுங்கு கள் செய்யப்படாது போனாலும் கொமன் வெல்த் செயலாளர் கமலேஸ் சர்மா எலிசபெத் மகா ராணிக்கு விருந்துபசாரத்தில் அவருடன் உரையாடுவதற்கு ம்ஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

மேலும் ஜனாதிபதியுடன் லண்டன் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கை சந்திக்க விருப்பம் கொண்டுள்ளார். பெரும்பாலும் இச்சந்திப்பு இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜனாதிபதியின் லண்டன் பயண ஒழுங்குகளை கவனிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன லண்டனில் தங்கியுள்ளார். (அ-2)

# தாதியர் பயிற்சிக்கல்லூரி அமைக்க சவுதி அரேபியா நிதியுதவி வழங்கியது

(கொழும்பு)




சர்வதேச அங்கீகாரம் பெற்ற தாதியர் பயிற்சி கல்லூரியினை கொழும்பில் அமைப்பதற்கு சவுதி அரேபியா நிதி வழங்கியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் சவுதி அரேபியாவும் இணைந்தே இந்த பயிற்சி கல்லூரியினை ஆரம்பிக்கவுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் கடந்த வாரம் சவுதி அரேபியாவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த தாதியர் பயிற்சி கல்லூரி 40 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கட்டப்படவுள்ளது.

பல்வேறு வசதிகளைக்கொண்ட இலங்கையின் முதலாவது பயிற்சிக் கல்லூரியாக இது அமையும் எனவும் 100 படுக்கை அறைகள், தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் என்பனவும் இந்த பயிற்சிக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு பயிற்சி பெறும் தாதியர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ-2)



அவுஸ்திரேலியாவின் ஏஜடி திட்டத்தின் கீழ் யுனிசெப் நிறுவனத்தால் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்ட கட்டடத் தொகுதி வேலைகளைப் பார்வையிட்ட இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் ரொபின் மூடி அண்மையில் பாடசாலைக்கு வருகை தந்தார். இவருடன் யுனிசெப் நிறுவன பிரதிநிதிகளும் வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேள், உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. கணேசலிங்கம், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆகியோர் கலந்துரையாடுவதையும் மாணவி ஒருவரை நலம் விசாரிப்பதையும் படங்களில் காணலாம்.

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழத்தினால் நடத்தப்படும் அமரர் பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஜதராபாத் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரும் பௌதீகவியல் பேராசிரியருமான இர்ாமகிருஸ்ணா இராமசாமி குழப்பம்: ஓர் இடை நிலை இரா்ச்சியம் எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (அ-2)

# பட்டதாரி நியமனத்தில் எவ்விதமான அரசியற்பலமும் பயன்படுத்தப்படாது

## பிரதியமைச்சர் முரளிதரன் வாக்குறுதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள பட்டதாரி நியமனம் தொடர்பில் அரசியல் வாதிகளோ முகவர்களோ பணம் பெறும் முயற்சியில் ஈடுபட்டால் அது தொடர்பில் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் இதில் எந்தவிதமான அரசியல் பலமும் பயன்படுத்தப்படமாட்டாது என்பதுடன் ஆண்டு அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படும் என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளைச் சந்தித்து நேற்று முன்திரமிரவு கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கம் விடுத்த முறைகேடான நியமனங்கள் இடம்பெறக்கூடாது. மூப்பு அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். மாற்றுவலுவுடையோர்களுக்கு முன்னுரிமை வழங்கப் பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர்,

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபுக்கமைவாக திறைசேரிக்கு விடுத்த அறிவுறுத்தலுக்கமைவாக இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

பரீட்சைகள் மூலம் பட்டதாரிகளை அரசாங்க நியமனங்களில் உள்வாங்கும் முறைமை நிறுத்தப்பட்டுள்ளது.


நீங்கள் அனைவரும் நேர்முகப் பரீட்சைகளின் மூலம் அரச நியமனங்களில் உள்வாங்கப்படுவீர்கள். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைகளில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் எனக்கு தெரியப்படுத்துங்கள். அத்துடன் நேர்முகப்பரீட்சை முடிவுற்றதும் அது தொடர்பிலிலும் எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக உள்ளது. தொடர்ந்தும் ஏற்படும் பண வீக்கத்துக்கு ஏற்றாற்போல் உற்பத்திகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

உங்களுடைய நியமனங்களை வழங்குவதற்காக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்று அதனைச் செயற்படுத்துகின்றது. அதன் மூலமும் பணவீக்கம் அதிகரிக்கப்போகின்றது.

பொருளாதாரத்தினை வளப்படுத்துவதற்கான பெரும் சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கையில் முதலிடுவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்து எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (அ-2)



# உயிர் மீண்ட காளை மாடு 19

***16.04.2012 அன்று நடந்த வழக்கில் எதிரி சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி மன்றுக்கு சமர்ப்பித்த அறிக்கையின் நேற்றைய தொடர்ச்சி...***

மேலும் அரச அதிபர் இவ்வாறு நீதிமன்றுக்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிக்கையின் கட்டளை நீதிமன்றை அவமரியாதையாகக் குறிப்பிட்டுள்ளது. அவ்வாறு செயற்படுத்துவதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் இறுதியாக பிரிவு 98 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படும் போது B அறிக்கை மூலம் தாக்கல் செய்யப்பட முடியாது. ஆயினும் இவ் வழக்கை B அறிக்கை மூலம் தாக்கல் செய்து பிராது அணைக்கப்பட முடியும். இவ் வழக்கு B அறிக்கை மூலம் தாக்கல் செய்துள்ளது முறையாகவும், சரியாகவும் இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டு பிராதும் போடப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதேவேளை, என்னால் மேலே குறிப்பிடப்பட்ட சமர்ப்பணத்திற்கு மேலதிகமாக எனது கட்சிக்காரரினால் கையொப்பம் இடப்பட்ட சத்தியக்கூற்று ஒன்றையும் அதற்கு அவசியமான ஆவணங்களுடனும் கௌரவ இந்நீதிமன்றுக்கு நான் சமர்ப்பிக்கின்றேன். மேலும் X1-X6 வரையிலான ஆவணங்களுடன் சத்தியக்கூற்றை நீதிமன்றுக்கு அணைக்கின்றேன்.

இவ்வேளையில் முறைப்பாட்டாளர் சார்பில் தோன்றும் சட்டத்தரணி திரு. இ.த. விக்னராஜா அவர்கள் நீதிமன்றுக்கு பின்வருமாறு சமர்ப்பணம் செய்கின்றார்.

**மாண்புமிகு நீதிபதி அவர்களே!** எதிரி தரப்பில் கற்று அறிந்த நண்பர் இவ் வழக்கில் விடயப்பொருள் நீதியியற் சட்டத்திற்கு ஏற்ப இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கான முன் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் சட்டத்தின் தேவை வரையறைகளுக்கு ஏற்ப பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கை பெறப்பட்டதாகவும் சட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் கனம் நீதிபதி அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு கற்று அறிந்த நண்பர் அவர்களின் சமர்ப்பணமும், ஆவணங்களும் சமர்ப்பித்துள்ள வேளையில், சமர்ப்பித்த ஒவ்வொரு ஆவணங்களிலும் அதில் என்னத்தை எனது நண்பர் சுட்டி இருக்கின்றாரோ எனக்குத் தெரியவில்லை.

அதாவது பிரசுரிக்கப்பட்ட விளம்பரமான துண்டுப்பிரசுரம் இவ்வழக்கில் மிக முக்கியமான அம்சம் என்பதை நான் கனம் நீதிபதி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

எனவே கற்று அறிந்த நண்பர் குறிப்பிட்டது போல் எதிரியானவர் இவ்வாறான காளைமாடுகளின் இறைச்சி சட்ட வரம்புக்குள் அமைந்து செயற்பட்டு வந்திருக்க முடியும். ஆனால் எதுவித தாக்கமோ அமைதிக்குப் பங்கமோ ஏற்பட்டிருக்கவில்லை.

ஆனால் கனம் நீதிபதி அவர்களே!

இவ்வழக்கில் எதிரியானவர் துண்டுப்பிரசுரம் செய்ததானது எந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் என்பதை கொடுத்திருக்க வேண்டும். அப்படி அவர் துண்டுப்பிரசுரம் வெளியிடுவதற்கு ஒரு ஏற்பாடுகளும் இல்லை. அவ்வாறான துண்டுப்பிரசுரத்தை கனம் நீதிபதி அவர்கள் முன் இவ்வழக்கிற்கு கொண்டு வந்து முன் வைத்துள்ளமை எனது முதலாவது கனம் நீதிபதி அவர்களின் கவனத்தை ஈர்க்கும் முதலாவது அம்சமாகும்.

அடுத்தது முக்கியமான அம்சம் என்னவெனில், சட்ட ஏற்பாடுகள் பற்றி நண்பர் குறிப்பிட்ட அத்தனை சட்ட ஏற்பாடுகளும் சட்டவாக்கத் துறையினரை அமைதியான ஜனநாயக சூழலை ஏற்படுத்தக்கூடிய வகையில் நீதியியற் சட்ட ஏற்பாடுகள் தேவை என்ற போர்வையில் அதே வேளை நீதியியற் சட்டம் விதித்துக் கூறாத துண்டுப் பிரசுரங்களை இக்குடாநாட்டில் வெளியிட்டு வந்த துண்டுப் பிரசுங்கள் மக்கள் மத்தியில் ஒரு அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கக் காரணமாகிவிட்டது என்பதை நான் பொறுப்புணர்ச்சியுடன் மன்றின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

நண்பர், அடிப்படை உரிமை பற்றி உரைக்க முன் வந்த போது கனம் நீதிபதி அவர்கள் அது அவசியம் இல்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் அடிப்படை உரிமை சம்பந்தமான விடயம் மட்டுமல்ல அரசியலமைப்பு 13 ஆவது உறுப்புரிமையின் பிரகாரம் நீதி நடவடிக்கை முறை பற்றி உறுப்புரை 13 இல் தெட்டத்தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, உயர் நீதிம்ன்றில் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக சுட்டிக்காட்டியிருக்கின்ற போதிலும் அரசியலமைமைப்பு உரிமைகளை மீறும் செயற்பாடு தோன்றியுள்ளதாக மாண்புமிகு நீதிபதி அவர்களின் முதல் நிலை திருப்திக்கு கொண்டுவரப்படுமாயின் அரசியலமைப்பினை வியாக்கியானம் செய்யக்கூடிய உச்ச நீதிமன்றம், அது மேல் நீதிமன்றமாக இருக்கும். 120 ஆவது உறுப்புரிமையின் பிரகாரம் பாரப்படுத்தியிருக்க வேண்டும் என்றபோது மாவட்ட நீதிமன்றின் நீதிவான் கூட அரசியலமைப்புக்கு குந்தகமான விதத்தில் ஒரு குறித்த நீதிபதி அவர்கள் முன்வந்ததாக காணப்படின் உச்ச ஏற்பாடுகள் இருக்கும்.

அதை உச்ச நீதிமன்றில் பாரப்படுத்த முடியும். எனவே நான் வலுவாக இதைத்தான் துண்டுப்பிரசுரம் பிரசுரிக்காவிட்டால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது எனக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

அந்தத் துண்டுப் பிரசுரம் பிரசுரித்ததன் மூலம் சட்டவாக்கத்துறையினருக்கான இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட காளைமாட்டை வெட்டி அதனைப் பாவனைக்கு உகந்தது எனப் பிரசுரிக்கும் வேறு தேவைப்பாடுகளை சட்ட ஏற்பாடுகள் என்ற போர்வையில் இந்தத் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டதன் பிரகாரம் கனம் நீதிபதி அவர்களே! நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ எமது நாட்டில் பல சமயங்கள் இருக்கின்றன. ஆண்டவன் ஒருவரே இருக்கின்றார். அதை எனது நண்பர் வாயால் வழக்கிற்கு உரைத்துள்ளார் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றேன். இதைஎனது நண்பர் தான் கூறிக்கொள்ள வேண்டும்.

அது ஆண்டவனால் கூறிய சட்ட ஏற்பாடுகள் அல்ல என்பதையும் அது ஆண்டவனுடைய செயற்பாடு எனவும் கூறுகின்றேன்.

ஆகவே இவ்வழக்கு குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக்கோவையின் பிரகாரம் பொலிஸார் B அறிக்கையை மன்றின் முன் வைத்துள்ளார்கள். அந்த B அறிக்கையில் ஒரு விடயம் இருக்கின்ற போது கனம் நீதிபதி அவர்களே! முதன் நிலை ஆட்சேபனையை பரிசீலிக்கலாம் என நான் நினைக்கின்றேன்.

குற்றவியல் நடைமுறைத் தேவைப்பாடுகளுக்கமைய பிராது தாக்கல் செய்யப்படும் வரை நீதிபதி அவர்கள் அந்த ஆட்சேபனையை பரிசோதிக்கப் பேணி வைப்பார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் படி பிராதை தாக்கல் செய்து பொலிஸார் தான் நீதிமன்றுக்குக் கொண்டு வருவார்கள். மக்களுடைய உணர்வைத் தூண்டிவிட்ட விடயம் எதுவெனில் தற்போது நீதிபதி அவர்கள் சரியாகக் குறிப்பிட்டது போல் உயர் அதிகாரிகளால் இந்த விடயம் சரியாகக் கையாளப்பட்டிருக்கும்.


எனவே இன்று இருக்கின்ற இந்த விடயமானது சட்ட ஏற்பாடுகளில் இருக்கின்ற கொந்தளிப்பை நியாயப்படுத்த வேண்டியது மாண்புமிகு நீதிபதி அவர்களுக்குள்ள பொறுப்பு.

எனவே தான் நீதிமன்றினால் சுட்டிக்காட்டியது போல் இவ்வழக்கை கையாள முடியாத பட்சத்தில் சட்டத் தேவைப்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க அனுமதி தர வேண்டும் என நான் இந்த கௌரவமான மன்றை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(வளரும்)

**விதுரன்**

# சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை



(கொழும்பு)

**கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் அமுல்படுத்தக்கூடியவற்றை விரைவாக அமுல்படுத்துமாறு அரசாங்கத்துக்கு யோசனை வழங்கியுள்ளதாகவும் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காகவன்றி உள்நாட்டு மக்களின் நலன்கருதி இதனை முன்னெடுக்க வேண்டும் எனவும் முன்னாள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

நல்லிணக்க ஆணைக்குழுவின் யோசனைகளை அமுல்படுத்துவது குறித்து ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் யோசனைகளை வழங்குமாறு அண்மையில் கோரப்பட்டிருந்தது.

அது தொடர்பில் அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் கட்சியான லங்கா சம சமாஜ கட்சியின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனையில் இந்த விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழுவின் யோசனைகளை அமுல்படுத்துவது குறித்து ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் கருத்துக்களை வழங்குமாறு அண்மையில் அரசாங்கத்தினால் கோரப்பட்டிருந்தது.

அது தொடர்பில் எமது கட்சியான லங்கா சம சமாஜ கட்சியின் சார்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்த யோசனையின் பிரகாரம் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் அமுல்படுத்தக்கூடியவற்றை விரைவாக அமுல்படுத்துமாறு அரசாங்கத்துக்கு யோசனை வழங்கியுள்ளோம்.

அதாவது நல்லிணக்க ஆணைக்குழு பல்வேறு விதமான யோசனைகளையும் சிபார்சுகளையும் முன்வைத்துள்ளது. அவற்றில் அனைத்தையும் அமுல்படுத்த முடியாத நிலைமைகள் காணப்படலாம்.

ஆனால் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் அமுல்படுத்த முடியுமானவற்றை விரைவாக அமுல்படுத்துமாறே நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறு விரைவாக பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் சர்வதேச மட்ட அழுத்தங்களை தவிர்க்க முடியும். ஆனால் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக நாம் பரிந்துரைகளை அமுல் படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை.

மாறாக எமது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாகவும் அனைத்து உரிமைகளையும் பெறும் வகையிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது எமது கடமையாகும். அதனாலேயே இதனை முன்னெடுக்குமாறு கூறுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆபாச இணையத்தளங்கள் எதுவும் தடை செய்யப்படவில்லை

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிப்பு

ஆபாச இணையத்தளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் பல தடவைகள் கூறியுள்ள போதிலும் ஆபாச இணையத்தளங்கள் எதுவும் இலங்கையில் தடை செய்யப்படவில்லை என தேசிய சிறுவர் பூாதுகாப்பு அதிகாரசபை நேற்றையதினம் தெரிவித்துள்ளது.

இவ்விடயுத்தில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு செயற்படவில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பொறுப்பதிகாரி புத்திக பாலசந்திர தெரிவித்துள்ளார்.

ஆபாச படங்கள் கொண்ட இணையத்தளங்களை தடைசெய்வதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டோம். இலங்கை மொடல்களை கொண்ட 300 ஆபாச இணையத்தளங்களை தடை செய்வதில் நாம் வெற்றியடைந்தோம்.

எனினும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வினைத்திறனாக தடை பிரயோகிக்கப்படாததால் அந்த இணையத்தளங்கள் வித்தியாசமான பெயர்களில் இயங்குகின்றனஎன அவர் கூறியுள்ளார்.

ஆபாச இணையத்தளங்களை தடைசெய்வது சாத்தியமானதல்ல எனவும் அது தெரிவுக்கான சுதந்திரத்தையும் பாதிக்கும் எனவும் சுட்டிக்காட்டியபோது இத்தகைய இணையத்தளங்கள் இயங்குகின்றன என்பதை தெரிவித்து இத்தகைய தளங்களை சிறுவர்கள் அடைவதை தடுக்க வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே தமது நோக்கம் என அப்பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-2)

# வெயிலின் கோரத்தாண்டவம் ஆந்திராவில் 148 பேர் பலி

(சென்னை)

அக்னி நட்சத்திரம் முடிந்த பின்னரும் ஆந்திராவில் வெயில் கொளுத்துகிறது. கடந்த சில நாட்களாக வெயிலின் கோரத்தாண்டவம் உச்சத்தை தொட்டுள்ளது.

கடுமையான அனல்காற்றும் வீசுகிறது. இந்நிலையில் மேற்கு கோதாவரி மாவட்டம் காகிநாடா மறறும் துணியில் நேற்று 116.6 டிகிரி வெயில் கொளுத்தியது. கம்மம் மாவட்டத்தில் 114.8 டிகிரியும் திருப்பதி, நிஜாமா பாத், கர்னூல் ஆகிய 3 நகரங்களில் 111.2 டிகிரியும் வெயில் பதிவாகியிருந்தது.

வெயிலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 148 பேர் சுருண்டு விழுந்து இறந்துள்ளனர். கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் 13 பேரும் விசாகப் பட்டினத்தில் 31 பேரும் மேற்கு கோதாவரியில் 21 பேரும் கம்மம் மாவட்டத்தில் 13 பேரும் கிருஷ்ணா வாரங்கல் மாவட்டத்தில் தலா 11 பேரும் விஜய நகரத்தில் 9 பேரும் ஸ்ரீகாகுளம், கரீம் நகரில் தலா 6 பேரும் குண்டூரில் 4 பேரும் பலியாகியுள்ளனர்.

17 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதாக வானிலை இலாகா அறிவித்துள்ளது. (அ-2)

# இலங்கையில் எதிர்கால புவியதிர்வு குறித்து ஆராய்வு

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

இலங்கையில் பாரிய புவியதிர்வு ஏற்படுமா என்ற அடிப்படையில் தயார் நிலைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரே வாரத்துக்குள் இரண்டு புவியதிர்வுகள் இலங்கையின் பல பகுதிகளிலும் உணரப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அவசர நிலைமைகளின் போது மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது கருத்துரைத்த அமைச்சர் எதிர்காலத்தில் புவியதிர்வுகளோ, சுனாமியோ ஏற்படும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிக்கை இந்த வாரத்தில் தமக்கு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

புவி சரிதவியல் திணைக்களம் ஏற்கனவே கடந்த வாரங்களின் புவியதிர்வுகள் குறித்து ஆராய்வுகளை மேற்கொண்டே இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கையில் உணரப்பட்ட இந்த புவியதிர்வு பக்கத்தில் உள்ள இந்தியாவில் உணரப்படவில்லை.

குறிப்பாக கொழும்பு யாழ்ப்பாணம் மற்றும் நுவரேலிய ஆகிய இடங்களிலேயே இந்த 3.3 ரிக்டர் அளவிலான இந்த அதிர்வுகள் உணரப்பட்டன. (அ-2)

# பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை தொடர்பில் உலகநாடுகள் ஆர்வம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

இலங்கையின் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து உலக நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற ஷன்கிரிலா பாதுகாப்பு பேரவை கூட்டத்தில் கலந்து கொண்ட நாடுகள் இலங்கையின் தந்திரோபாயங்கள் தொடர்பில் ஆர்வம் காட்டியதாக குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத ஒழிப்பு, சட்டவிரோத ஆட்கடத்தல் தவிர்ப்பு போன்ற விடயங்களில் இலங்கை பாதுகாப்பு தரப்பின் தந்திரோபாயங்கள் மற்றும் அணுகுமுறைகள் தொடர்பில் உலகின் பல நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரின் அனுபவங்களை உலகின் பல நாடுகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முன்னாள் விமானப் படை தளபதி ரொசான் குணதிலக்க ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

துஷ்டனையும் தங்கத்தையும் பேரிகையையும் முரட்டுக் குதிரையையும் நற்குண விருத்தி கருதி அடிக்க வேண்டும்.
–ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சமூகம் பற்றிய விழிப்புணர்வில் அக்கறை கொள்ளுங்கள்

யுத்தத்தின் பின்பான எங்கள் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள், காதல் பிறழ்வுகள், தற்கொலைகள், விபத்து மரணங்கள், கொள்ளை, கொலைகள், போதைப்பாவனைகள், வெறியாட்டங்கள் கூடவே களியாட்டங்கள் இப்படியாக எங்கள் சமூகம் சீரழிந்து சின்னாபின்னப்பட்டு போவதை பார்க்கும் போது வயிறு பற்றி எரிகிறது.

ஆபாசப்படங்கள் அடங்கிய இறுவெட்டுக்களோடு திரிகின்ற பள்ளிமாணவர்கள்.

ஆ! கடவுளே! வெந்தணலை அள்ளித் தலையில் கொட்டும் கொடூரமான துன்பம் தொடர்கின்றது.

கட்டுப்பாட்டுடன் இருந்த எங்கள் வடபகுதிக்குள் ஆபாசப்படங்களும், போதைப்பொருட்களும் தாராளமாக வந்தாகிவிட்டன.

ஒரு இனம் போதைக்கும் ஆபாசத்திற்கும் அடிமைபட்டுவிட்டால் அந்த இனம் அடியோடு தன் இனச்சிறப்புக்களை இழந்து போவதென்பது சர்வநிச்சயம்.

இதற்கான ஏற்பாடுகளாகக்கூட இவை அமையலாம்.

இவையாவற்றுக்கும் மேலாக எங்கள் குடும்பச் சிறப்புக்களை கருவறுக்கும் கையடக்கத் தொலைபேசிகளும், தொலைக்காட்சி மோகமும் தாய், தந்தை, பிள்ளை என்ற உறவு வேறுபாடின்றி அருவருக்கத்தக்க காட்சிகளை ஒன்றாக கூடியிருந்து பார்க்கும் கொடுமைகளும் எங்கள் மண்ணில் சர்வசாதாரணமாக நடந்தேறுகின்றன.

தாய், தந்தை, பிள்ளை உறவு என்பதற்குள் இருக்கக் கூடிய உன்னதத்தை சீரழித்து விட்டால், யாருடன் எதை பேசக் கூடாதோ அவருடன் அதைப் பேசுகின்ற பெரும் கொடுமை அரங்கேறும்.

இவற்றின் நீண்ட காலத் தொடர்ச்சியின் விளைவாகத் கட்டிக்காப்பாற்ற வேண்டிய கற்பொழுக்கம் முதல் அறவொழுக்கம் வரை எல்லாமும் சுணைகெட்டு எப்படியும் வாழலாம் என்ற மன வக்கிரம் ஏற்பட்டு விடும்.

அதன் பின்னர் தாய், தந்தை, பிள்ளையென்ற உறவுகளுக்குள் இருக்கக் கூடிய மானசீகமான–அர்த்த புஷ்டியான அம்சங்கள் அத்தனையும் அறுபட்டுபோகும்.

ஆகையால் அன்புக்குரிய இளைஞர்களே! பெரியவர்களே! பெருமைமிகு எங்கள் பண்பாடு, கலாசாரம், அறவொழுக்கம் கட்டிக்காப்பாற்றப்படவேண்டும்.

எந்த உணர்வுமின்றி விரசத்தால் வீழ்ந்து புரளும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் சூழ்ச்சியை வேரறுக்க ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண வேண்டும்.

கலாசார சீரழிவு எதுவாயினும் அவை எங்கு நடந்தாலும் அதுபற்றிய தகவல்களை பொறுப்பானவர்களுக்கு தெரியப்படுத்தவும் அதனைத் தடுக்கவும் தமிழ்ச் சமூகம் முன்வரவேண்டும்.

அவ்வாறான முன்வருகையைத்தவிர எங்கள் இனத்தை வேறுஎவராலும் காப்பாற்ற முடியாது.

# இனப்படுகொலைக்கு காரணமானவரை வெளியேற்ற உறவுகளே ஒன்று திரளுங்கள்

## வைகோ அறிக்கை



(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை லண்டனுக்குள் காலடிவைக்க விடாது துரத்தி அடியுங்கள் என ஈழத்தமிழர்களுக்கு வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் லண்டன் பயணத்தை கண்டித்து புலம்பெயர் லண்டன் வாழ் தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் ஆர்ப்பாட்டங்களை ஊக்குவிக்கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு,

பிரித்தானிய நாட்டின் பேரரசியின் நிகழ்வில் பங்கெடுக்க மஹிந்த ராஜபக்ஷ சென்றுள்ளார். அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் சொல்வோம் அமைச்சர்களுக்கும் ஏழைகளுக்கும் ஊடகங்களுக்கும் சொல்வோம். பிரித்தானியா தான், இலங்கைத் தீவினை விட்டு 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி வெளியேறும் போது எங்கள் சொந்த பூமியான தமிழீழத்தையும் சிங்களவன் காலடியில் வைத்து பூட்டிவிட்டு போனீர்கள். உங்களுக்குத்தான் பொறுப்பிருக்கின்றது.

தடை செய்யப்பட்ட குண்டுகள் வீசப்பட்டு ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டனர். பட்டினி போட்டு பொருளாதார தடை போட்டு தமிழ்மக்களை கொன்ற னர். ஏழு வல்லரசுகளின் ஆயுதப் பலத் துடன் தமிழினத்தை அழித்தார்கள்.

இந்தக் கொடிய செயலுக்கு காரணமானவரை, உலகத்தின் மனச்சாட்சியின் தகவுகளை மீண்டும் தட்டும் இனப்படுகொலை செய்தவரை சர்வதேச நீதிமன்றக் கூண்டிலே நிறுத்த வேளை வந்திருக்கின்றது என்று உணர்த்துவதற்கு பயன்படும்.

கடந்த ஆண்டு லண்டன் நகரில் நீங்கள் திரண்டு எழுந்து மஹிந்த வினை விரட்டி அடித்ததன் விளைவாக அதுவரை செவிடாக இருந்த பல நாடுகளின் காதுகள் திறந்து கொண்டன. மூடிக் கொண்ட கண்கள் திறக்க ஆம்பித்தன. ஈழத்தில் சிங்கள குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும். சிங்களவன் வெளியேற்றப்பட வேண்டும். பாலஸ்தீனத்திற்கு சுதந்திரத்தை கொடுத்து தீர வேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டோமே என்று இதுவரையும் படைப்பலத்தினை நம்பி இருந்த இஸ்ரேலும் யூதர்களும் நம்பி இருந்த வேளையில் தாயகம் மலர்வதற்கு தடையானவரைக் கூண்டில் நிறுத்தி தண்டிப்பதற்கு ஆர்த்தெழுங்கள் ஈழத்தில் துடிக்க துடிக்க கொல்லப்பட்ட மக்களை மனக்கண் முன்னே கொண்டு வாருங்கள்.

மடிந்து போன நம் உறவுகள் அநாதைகளான அவலக்குரல் எங்கும் கேட்கவில்லையோ என்று எழுப்பி அந்த கணத்தினை எண்ணிப்பாருங்கள்.

இனப்படுகொலைக்கு கூண்டில் நிறு த்துவது ஒரு கட்டம். சிங்களக் குடியேற் றங்கள் வெளியேற்றப்பட்டு சுதந்திர தமிழீழத்திற்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டியது அடுத்த கட்டம். அதில் புவியெங்கும் இருக்கக் கூடிய ஈழத்து சகோதரங்கள் அந்தந்த நாடுகளில் வாக்கெடுப்பில் பங்கெடுக்கக்கூடிய வேளையினை ஐ.நா. மன்றமும் உலக நாடுகளும் செய்ய வேண்டிய வேளை வந்திருக்கின்றது.

அந்தக் கோரிக்கை நியாயத்தினை எல்லோரும் உணர ஆரம்பித்திருக்கின்றார்கள். இந்தக் கட்டத்தில் ஈழத்தமிழருக்கு துரோகம் செய்த ஜனாதிபதிக்கு இதுவரை உதவியை செய்தவர்கள் இனிமேலும் உதவி செய்யக் கூடாது என எச்சரிக்கை மணியோசையாக உங்கள் போராட்டக்குரல் எழுக. விரட்டி அடிப்பதற்குப் புறப்படுங்கள்... போர் முழக்கம் எழுப்புங்கள்... வெளியேற்றுங்கள்... எனஅவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கான போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சை நடைபெறவுள்ளதாக கூட்டுறவு அபிவிரு த்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டபிள்யூ எச். கருணாரத்ன அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறவுள்ளது. இப் பரீட்சையில் தோற்றுவதற்கான கல் வித் தகைமைகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒன்றிலும் அத்துடன் கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் பொருளியல், கணக்கியல், வணிக புள்ளிவிபரவியல், வணிகவியல், விவசாயம், இணைந்த கணிதம் ஆகிய படங்களில் ஆகக் குறைந்தது ஒரு பாடம் உள்ளடங்கலாக அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அவ்வாறின்றி பழைய பாடத்திட்டத்தின் கீழ் எனின் மூன்று பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் தொழில்சார் கல்வித் தகைமைகளாக தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப் பட்ட கணக்கியல் அல்லது கணக்கா ய்வு அல்லது முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 500 ரூபா பரீட்சைக் கட்டணத்தை மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் இலக்க வருமான தலைப்பில் செலவு வைப்பதன் ஊடாக செலுத்த வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

இப்போட்டிப் பரீட்சைக்கான மேலதிக தகவல்களை கடந்த முதலாம் திகதிய வர்த்தகமானிப்பத்திரிகையிலோ அல்லது வலம்புரிக் காரியாலய த்திலோ பார்வையிடமுடியும். (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## பொறுமைக்குப் பெரிய பரிசு



நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உன்னிடம் இருக்கும்வரை அனைத்துச் செயலும் முன்னேற்றமடையும். இறைவன் அருளால் அபாயம் எதுவும் ஏற்படாது.

பூமி மாதாவைப்போன்று அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.

நன்மைகளைப் பெறவேண்டுமானால் வாழும் தெய்வமாகிய ஒவ்வொரு மனிதனையும் வழிபடுங்கள்.

ஏழைக்கு உதவி செய்வது என்பது கோயிலில் சிவனைக் கண்டு வணங் குபவனிடம் சிவன் அடையும் மகிழ்ச்சியை விட மேலானதாகும்.

கடவுள் வரம்பு கடந்த பெருமைகளை உடையவர். அவரை வணங்கி தூய்மையான மனதைப் பெறலாம். இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவரையே எப்போதும் சார்ந்து நில்லுங்கள்.

கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய்க்கிடக்க நேர்ந்தாலும் உன்னிடத்தில் ஒருவன் கேட்டால் கடைசிப் பருக்கையையும் கொடுத்துவிடு. அப்போது நீ பூரணமடைவதுடன் தெய்வமாகவும் ஆவாய்.

# மன்னார் ஆயரின் பாதுகாப்பு தொடர்பில் பாப்பரசர் ஜனாதிபதியிடம் விளக்கம் கோருவார்

(கொழும்பு)

**மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசேப்பின் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து பரிசுத்த பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ட், இலங்கை ஜனாதிபதியிடம் தமது அதிருப்தியை வெளியிடுவார் என்று சிரேஷ்ட செய்தியாளர் ஒருவர் செய்தி வெளியிட்டுள்ளார்.**

பிரித்தானிய மகாராணியின் வைரவிழா நிகழ்வுக்காக பிரித்தானியாவுக்கு சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் வியாழக்கிழமை வத்திக்கானுக்கு விஜயம் செய்யவுள்ளார். இதன் போது அவர் பாப்பரசரை சந்திக்கவுள்ளார்.

இந்தநிலையில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அண்மைக்காலமாக எதிர்நோக்கி வரும் அச்சுறுத்தல்கள் குறித்து பாப்பரசர் தனிப்பிட்ட ரீதியில் தமது அதிருப்தியை வெளியிடுவார் என்று வத்திக்கான் தகவல்களை மேற்கோள்காட்டி சிரேஷ்ட செய்தியாளர் தமது செய்தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்றத்தில் வைத்து மன்னார் ஆயரை, பௌத்த பிக்குமாருக்கு ஒப்பிட்டமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் ஆயர் அளித்த காணாமல் போனோர் தொடர்பான விடயங்கள் குறித்து இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் வாக்குமூலம் பெற்றமை போன்ற விடயங்கள் வத்திக்கானுக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளன.

அத்துடன் இந்தச் சம்பவத்தை அடுத்து மன்னார் ஆயருக்கு ஆதரவாக நடத்தப்பட்ட கூட்டத்துக்குத் தடையுத்தரவு விதிக்கப் பட்டமை, கூட்டத்தில் பங்கேற்ற சிரேஷ்ட முஸ்லிம் செய்தியாளர் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் ஆதரவாளர் ஒருவரால் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்களும் வத்திக்கானுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்பின்னர் பாப்பரசரின் செயலாளரான காடினர் டார்சிஸ்ஸியோ பேர்டோன், இந்த விடயம் குறித்து இலங்கையின் ஜனாதிபதியிடம் விளக்கம் கோருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் 1940 ஆம் ஆண்டில் பிறந்தார். 1967 ஆம் ஆண்டு குருத்துவம் பெற்றார். இதன் பின்னர் சுமார் 20 ஆண்டுகள் மன்னார் ஆயராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சவுதிச்சிறையில் சிரமப்படும் இலங்கைப் பணியாளர்கள்

### தூதரகத்திற்கு அறிவித்தும் பயனில்லை

(கொழும்பு)

சவுதிஅரேபியாவில் மலாஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காக பெருமளவிலான இலங்கையர்கள் அந்த நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் செய்தி சேவை ஒன்றிற்கு குறிப்பிட்டுள்ளனர்.

தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சின்னகள் குறித்து இலங்கை தூதரகத்திற்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என்று இலங்கை பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்காரவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இந்த பணியாளர்களின் பிரச்சினைகள் குறித்து உடனடி கவனம் செலுத்தப்படும் என்று கூறினார்.

சவுதியிலுள்ள இலங்கை தூதரகம் ஊடாக அதிபர்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## செயலமர்வு

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்விவலயத்திலிருந்து உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இச் செயலமர்வில் வடமாகாண உள சமூக வள நிலையத்தின் உதவி முகாமையாளர்களான சி.உதயகலா , ச.ஆனந்தநடராஜன், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ.சுபாஸ்கரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

எனவே, தெரிவு செய்யப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் இன்று காலை வலயக்கல்வி பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-9-266)



பொசன் போயா தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை களனி விகாரையில் விசேட வழிபாடுகள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.

## தமிழக வீதி விபத்தில் இலங்கை அகதி பலி

### 3 பேர் காயம்

தமிழ்நாடு மண்டபம் பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று கடற்படை அதிகாரியொருவரின் காருடன் மோதி விபத்திற்குள்ளானதில் இலங்கை அகதியொருவர் பலியானதுடன் 3 பேர் காயமடைந்துள்ளதாக தமிழ்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நலன்புரி நிலையத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இலங்கை அகதிகள் வீதியைக் கடக்க முற்பட்டபோது கடற்படை அதிகாரியின் காருடன் மோதி விபத்திற்குள்ளானதாக பொலிஸார் கூறினர்.

காயமடைந்தவர்களில் இரு இலங்கை அகதிகளும் காரின் சாரதியும் அடங்குகின்றார்கள். இந்த விபத்து இடம்பெற்றபோது 3 கடற்படை வீரர்கள் காரில் இருந்ததாகவும் பொலிஸார் கூறினர். (அ)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் திருக்கோவில் 108 சங்காபிஷேக உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது.

இச்சங்காபிஷேகதினத்தன்று விசேடதிர விய அபிஷேகம் பூர்ணாகுதி, மூலவர், பஞ்சமுக விநாயகர் சங்காபிஷேகம், விசேட பூசை, திருவூஞ்சல் என்பவற்றுடன் சுவாமி வீதியுலாவும் நடைபெறவுள்ளது. (அ-7)

## இலங்கையில் அல்கொய்தா உறுப்பினர்கள் கிடையாது

### அமைச்சர் பௌசீ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அல்கொய்தா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் கிடையாது என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசீ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் அல்கொய்தா மற்றும் தலிபான் இயக்கத்துடன் தொடர்புடையவர்களின் சொத்துக்களை முடக்கும் புதிய சட்டம் அவசியமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறான அமைப்புக்களுடன் தொடர்புடைய எவரும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்புடனான உடன்படிக்கையின் அடிப்படையில் இந்தப் புதிய சட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு கருத்துத் தெரிவித்த ஹெகலிய ரம்புக்வெல,

முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே அல்கொய்தா மற்றும் தலிபான் இயக்கங்களுக்கு எதிரான தடை விதிக்கப்பட்டுள்ளது.

அல்கொய்தா மற்றும் தலிபான் அமைப்புடன் தொடர்புகளைப் பேணி வரும் நபர்களுக்கு தண்டனை விதிக்கும் புதிய சட்டமான அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கையாகும்.

உலக நாடுகளின் நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் இந்த சட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

இலங்கையில் தலிபான் மற்றும் அல்கொய்தா அமைப்பு உறுப்பினர்கள் இருப்பதாக அரசாங்கம் கருதவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் இந்த புதிய சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டத்தின் அடிப்படையில் அல்கொய்தா அல்லது தலிபான் அமைப்புடன் தொடர்புகளைப் பேணுவோருக்கு அபராதம் மற்றும் சிறைத்தண்டனை விதிக்கப்படுவதுடன் சொத்துக்களும் முடக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்: அஸரென்கா அதிர்ச்சி தோல்வி



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரில் முதல் நிலை வீரங்கனையான விக்டோரியா அஸரென்கா 4ஆம் சுற்றில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடக்கிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு 4 ஆம் சுற்றுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நடந்தன. இதில் முதல் நிலை வீரங்கனையான பெலாரசின் விக்டோரியா அஸரென்கா 15ஆம் நிலை வீராங்கனையான சுலோவாக்கியாவின் டொமினிகா சிபுல்கோவாவை எதிர்த்து விளையாடினார்.

இப்போட்டியில் அஸரென்கா ஆரம்பத்தில் இருந்தே தடுமாறினார். சிபுல்கோவாவின் அதிரடி ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாத அஸரென்கா முதல்செட்டை 2:6 என்ற கணக்கில் இழந்தார். இரண்டாவது செட்டில் இவர் தோல்வியை தவிர்க்க கடுமையாக போராடினார். ஆனாலும், சிபுல்கோவா 7:6 என்ற கணக்கில் 2 வது செட்டையும் கைப்பற்றி கால் இறுதிக்கு முன்னேறினார்.

பிரெஞ்ச் ஓபனில் அஸரென்கா இதுவரை அரை இறுதிக்கு தகுதி பெற்றதில்லை. இம்முறையும் இவர் 4வது சுற்றிலேயே தோல்வி அடைந்து ரசிகர்களை ஏமாற்றமடைய செய்துள்ளார். இதேபோல அனுபவ வீராங்கனையான ரஷ்யாவின் ஸ்வெட்னா குஸ்னட்சோவா 0:6, 5:7 என்ற செட் கணக்கில் இத்தாலியின் சாரா எர்ராணியிடம் தோல்வி அடைந்தார். பிரெஞ்ச் ஓபனில் எர்ராணி காலிறுதிக்கு முன்னேறுவது இதுவே முதல் முறை. காலிறுதியில் இவர் ஜெர்மனியின் கெர்பரை சந்திக்கிறார்.

# புதிய விதிகள் சில அணிகளுக்கு அதிக வாய்ப்பை வழங்கும்–மஹேல

சர்வதேச கிரிக்கெட் சபை செயற்குழுவினால் பரிதுரைக்கப்பட்டுள்ள புதிய விதிகள் சில நாடுகளுக்கு அதிக அனுகூலத்தை வழங்கலாம் என இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்ததன தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஒன்றுகூடிய ஐ.சி.சியின் செயற்குழு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஓர் ஓவருக்கு இரண்டு பவுன்சர்களை அனுமதிப்பது உட்பட சில பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. இம்மாற்றங்கள் தொடர்பான தனது கருத்துக்களை முன்வைக்கும் போதே மஹேல ஜெயவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையிலேயே ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஓர் அணிசார்பாக 2 புதிய பந்துகளைப் பயன்படுத்துவதற்காக விதி அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், புதிதாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள விதியும் நடைமுறைப் படுத்தப்பட்டால் சிறந்த வேகப்பந்து வீச்சை பிரதானமாகக் கொண்ட அணிகளுக்கு வாய்ப்பாக அமையும் எனக் கருதுகிறேன்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அண்மைக்காலத்தில் குறிப்பாக கடந்த 8 வருடங்களில் ஏராளமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ன. புதிய நுட்பங்களும், புதிய விதிகளும் உட்புகுத்தப்பட்டுள்ளன. அத்தோடு இவ்வாறான மாற்றங்கள் நிரந்தரமான மாற்றங்களாகக் கருதப்படுகின்றனவா என்பதை நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகள் 2015-ம் ஆண்டில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ள நிலையில் புதிதாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றங்கள் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கு அனுகூலமாக அமையுமா எனக் கேட்கப்பட்டமைக்கு, அவ்வாறு அமையும் எனத் தான் கருதுவதாக மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

## சி.ஐ.டி என ...

யாழ்ப்பாண பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

தன்னை பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொண்டு இவர் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் எனவும் இவரைக் கைது செய்வதற்கு தாங்கள் தேடிவந்துள்ளதாகவும் யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட குறித்த நபரை இன்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ந-8-11)

## பிரிட்டிஷ் ...

போது பிரித்தானியப் பிரதமருடன் கலந்துரையாட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மாவே ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரித்தானிய மகாராணியுடன் தொடர்புடைய இந்த ஒரு நிகழ்வில் மட்டுமே மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவுடன் லண்டனுக்கு விஜயம் செய்யும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கைச் சந்திக்கலாம் எனத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேற்று யு.எல் -505 என்ற இலக்கமுடைய விமானம் மூலம் ஹீத்ரோ விமான நிலையத்தை சென்றடைந்தனர். (ந-8,11)

## மகிந்த ராஜ ...

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, போராட்டங்களை நடத்துவதற்கும் புலம்பெயர் தமிழர்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-8-11)

## தமிழருக்கு எதிரா ...

மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டத்தில் அணி அணியாக பிரித்தானிய வாழ் தமிழ் மக்களை கலந்து கொள்ளுமாறு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு போட்டியாக சிங்கள் மக்கள் அணி திரண்டு சிங்கக் கொடிகளுடன் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நேர் எதிர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி வருவதால் தமிழ் மக்களை உடனடியாக லண்டன் ஹில்டன் ஹோட்டலுக்கு முன்பாக அணிதிரளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ந-8-11)

## லண்டன் சென்ற ...

தமிழ் அமைப்புக்களால் கோரப்பட்ட அனுமதிக்கு பிரித்தானிய பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இவ்விஜயம் தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் செயலகத்துக்கும், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆயினும், பொதுநலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் அடுத்த மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளதால் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஸ் சர்மா மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஜனாதிபதி கடந்த தடவை லண்டனுக்கு விஜயம் செய்திருந்தபோது, பிரித்தானிய வாழ் தமிழ் மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தினால் ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் அவர் ஆற்றவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்டதுடன் அவருக்கு எதிராக கடும் குளிரையும், பனிப் பொழிவையும் பொருட்படுத்தாமல் கடும் போராட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் தான் தங்கியிருந்த நட்சத்திர விடுதியில் இருந்து பாதுகாப்பாக அவர் பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகத்திற்குச் சென்று அங்கிருந்து முன் கூட்டியே கொழும்பு திரும்பியிருந்தார்.

இதனிடையில், இவர் நேற்றிரவு முன்தினமிரவு லண்டனை வந்தடையலாம் என எதிர்பாத்திருந்த பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் லண்டன் ஹித்ரோ விமான நிலையத்தில் பாரியளவில் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இதேவேளையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் தொடர் போராட்டங்களுக்கு பிரித்தானிய தமிழ் அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன. (ந-8-11)

# மரண அறிவித்தல்

## சுப்பையா குணரத்தினம்



(ஓய்வுபெற்ற நூலக ஊழியர் - யாழ்.பல்கலைக் கழகம்)

சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் புதுவீதி கொய்யாத்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா குணரத்தினம் நேற்று (04.06.2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமலரின் பாசமிகு கணவரும் பிரதீபா, சுதாகர், துஷ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் மகேந்திரன் (அவுஸ்திரேலியா), பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற மிருக வைத்திய ஊழியர்-கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், அற்புதமலர், கலாமலர், கமலேஸ்வரன் (லண்டன்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), சண்முகேஸ்வரன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற கந்தசாமி (மிருக வைத்திய ஊழியர்) மற்றும் திருமதி மகேந்திரம், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தட்சணேஸ்வரன், கணேசலிங்கம், ஆகியோரின் சகலனும், நிர்மலா, மஞ்சுளா, ரவி, பவா, கௌசலா, மேகலா ஆகியோரது மாமனும் யோகி, தர்ஷன், தர்ஷினி, ஜனகன், ஜனனி, லக்சினி, நிதர்சினி, ஆகியோரின் சிறிய தந்தையும் சபிதாவின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக் கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

39/2, புதுவீதி, கொய்யாத் தோட்டம்,
சுண்டிக்குளி.

தகவல்:
கு. சுதாகர்(மகன்)

(சி-151)

# தமிழர்களுக்கு நியாயமான ...

நாணயக்கார ஆகியோர் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வையும், அதிகாரப் பகிர்வையும் வழங்க வேண்டும் என மகிந்த அரசை வலியுறுத்துகின்றனர்.

மூத்த அமைச்சர்களின் கருத்தை ஏற்காத மகிந்த அரசு, இனவாதப்போக்குடைய ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளின் கருத்துக்களை வரவேற்று, அவற்றை தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறது.

அதிகாரப்பகிர்வுக்கு கலந்துரையாடல்மூலம்தீர்வுவழங்க வேண்டும். இதனை மூத்த அமைச்சர்கள் மகிந்த அரசிற்கு எடுத்துக் கூறுகின்ற போதிலும், அரசாங்கம் இதனைக் கருத்திற் கொள்ளாது செயற்படுகிறது. இது நாட்டிற்கு ஆரோக்கியமான விடயமல்ல.

இங்கு முஸ்லிம் பள்ளிவாசல்களின் விபரம் திரட்டும் நோக்கில் இரகசியப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

தமிழ் பேசும் மக்களுக்கும் இலங்கையில் சகல உரிமைகளும் உள்ளது. அவர்களின் சமய, கலாசார, பண்பாட்டு அம்சங்களை அழிக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படக்கூடாது.

இனவாதப் போக்கை கைவிட்டு நாட்டில் சமதானத்தையும் ஜனநாயகத்தையும் நிலை நிறுத்த மகிந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார். (ந-8-11)


## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

(8562)

4 ரெக்டர் - 21,500/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கன்னா
0776766499



## விற்பனையாளர் தேவை

பிரபல பாதணி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

Bata Stores
No.19,20, Modern Market,
Jaffna.
021 222 6732

(8571)



## முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டி



யாழ்.குடாநாட்டில் விசா மோசடியால் பாதிப்புற்ற எங்கள் இளந்தலைமுறையினருக்கு கைகொடுக்க தயாராகின்றது.

- ★ யாழ்.குடாநாட்டில் அண்மித்த காலப்பகுதியில் போலிவிசா முகவர்களிடம் சிக்கி தங்கள் வாழ்வையும் பணத்தையும் தொலைத்துவிட்ட எம் இளையோரே நீங்கள்.
- ★ இழந்த பணத்தை மீட்டுக் கொள்ள சட்டரீதியான அருகதை இருப்பின் போலிகளை குற்றவாளிகள் என நிரூபிப்பதற்கு வியாக்கியானப்படுத்த வழக்குரைக்க நாங்கள் நிதி உதவி புரிவோம்.நீங்கள் இழந்துவிட்ட நிம்மதியை நீங்கள் பெற நாம் உதவிக்கரம் நீட்டுகின்றோம்.

இது வியாபார ரீதியான சங்கதி அல்ல

உங்களது சட்ட சம்பந்தமான அத்தனை ஆவணங்களுடன் எங்களிடம் வாருங்கள்.புதன்கிழமை 06.06.2012 முதல் தொடர்பு கொள்ளலாம்.

விசேட ஆற்றுப்படுத்தும் அலுவலர்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

தலைமைக் காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 221 9016, 075 657 4136

உதவு தொகை, உதவுவகை, உதவுகாலம் எம்மைப் பொறுத்ததே.

இவ் விபரணம் திசைகாட்டியின் கௌரவ இயக்குநர் சபையின் கட்டளைப்படியே பிரசுரமாகின்றது.

(C-148)



## தரம் நான்கு மாணவர்களுக்குப் பயன்தரும் பயிற்சி வினாக்கள்

பிரபல இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியரான குணரஞ்சினி அவர்களின் ஆக்கத்தில் உருவான தமிழ், கணிதம், சுற்றாடல் சார் பாடங்களை உள்ளடக்கிய பயன்தரு பயிற்சிப் புத்தகங்கள் விற்பனையாகின்றது.

புத்தக விற்பனை நிலையங்கள், பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்களிற்கு விசேட விலைக்கழிவுடன் புத்தகம் தரப்படும். பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்:

ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர்
இராமநாதன் வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
தொ.பே.இல.:021 222 0231 (புலமைப்பரிசில் மாணவர்களுக்கு உகந்தது)

(8567)



## வேலைவாய்ப்பு

அச்சக வேலை, புத்தகம் கட்டுவதற்கு அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. பழகுவோரும் விரும்பத்தக்கது.

இடம்: ஆறுகால் மடச்சந்தி (மானிப்பாய் வீதி)

தொடர்பு: 0773920797

(8570)



## CIMA-UK Financial management (Management level)

November 2012 session-Batch I (9.6.2012- 9 A.M)



Why F.M @ MCS?

- ★ Flexible time table.
- ★ Individual attention
- ★ Syllabus completion on time
- ★ Revision classes
- ★ Mock exams
- ★ Comfortable pass

Supported by UNDP/JRRP

MCS IT CAMPUS
324, Palay Road, Jaffna.
For details Call us 772 395 895



## CIMA UK


Free Passing Advice, Degree holders Exemption Processing Convenience time Class, Bank Loan Arrangements

மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் நேரில்

MCAI CAMPUS
SMS Your name & Course to 775520940 & Get Schol.
243,Adiyapatham Road,Kalviyankadu
Www.mcaicampus.info
(கல்வியங்காட்டு சந்தி அருகில்,Bus Route 750/751)

Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
Supported by Jaffna Computer Society


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கண்மகிழ 12 ✵ 12 ✵ 1937

கண்நெகிழ 06 ✵ 05 ✵ 2012

### அருளப்பு ரினியன் அரியநாயகம் (அரியம்)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

கடந்த 06.05.2012ம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவரின் திடீர்மரண செய்திகேட்டு நேரிலும் தொலைத்தொடர்பு மூலமும் ஆறுதல்கூறி, மலர் வளையம், துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலமும் அஞ்சலி செலுத்தி மேலும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன சகல துறை ஊழியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், மற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள்.

இவரது நினைவுத்திருப்பலி 05.06.2012 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு பாண்டியன்தாழ்வு யாழ்ப்பாணம், புனித அன்னாள் ஆலயத்திலும், 09.06.2012 சனிக்கிழமை லண்டன், Harrow on the Hill Roxborough Park, The Our Lady and St.Thomas of Canterbury ஆலயத்தில் மாலை 6.00 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியின் பின் எமது இல்லத்தில் நடக்கும் உபசரணையில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54/3, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும், மனைவி,
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

(8550)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### மு.நிதர்சனா

(திதி 05.06.2012)

தோற்றம் 17 ✵ 05 ✵ 1993

மறைவு 17 ✵ 05 ✵ 2011

உள்ளம் தனை
உருகவைத்து
உணர்வுகளை
ரணமாக்கி
தன்னந்தனி வழிதேடி
நீ சென்றதேனோ?
ஓராண்டென்ன
ஒருகோடி வருடங்கள்
ஓடோடி மறைந்தாலும்
உன் நினைவு எம்மனதில்
நிலையாய்...
நீ எம் உயிராய்...

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா ரவி-அம்மா பவானி
மாமா பிரகாஸ்-அண்ணா நிரோஜன்
தம்பி சதுஜன்

கல்லூரி வீதி,
பருத்தித்துறை

(8566)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.